வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 28.07.2021 புதன்கிழமை | இதழ் : 237 | பக்கங்கள் : 16








# அதிபர், ஆசிரியர் பிரச்னைக்கு திங்கட்கிழமை இறுதித் தீர்வு!

## தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பில் பிரதமர் மஹிந்த உறுதி

கொழும்பு, ஜூலை 28

அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் முரண்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தை தொடர்ந்து இறுதி தீர்மானம் எட்டப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் தெரிவித்தார். 15

# கொரோனா தொற்றால் மேலும் 48 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 28

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

28 ஆண்களும் 20 பெண்களுமே நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளனர். அதன் அடிப் 15



கொரோனா பரவலில்

# மேல் மாகாணம் அபாய வலயம்!

## அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

கொரோனா வைரஸ் பரவலில் மேல் மாகாணம் அபாய வலயமாக உள்ளது என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடக 15



# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு 16 இலட்சம் கொரோனா தடுப்பூசி

கொழும்பு, ஜூலை 28

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்காக 16 இலட்சம் கொரோனா தடுப்பூசிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூய் ஷென்னொங் தடுப்பூசிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சம்பிரதாய பூர்வமாக கையளித்தார்.

வடக்கு கிழக்கினை சேர்ந்த 30 வயதிற்கு மேற் 15

# கொழும்பில் பதிவாகும் தொற்றாளர்களில் 20 முதல் 30 வீதமானவர்களுக்கு டெல்டா!

## பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் தகவல்

கொழும்பு, ஜூலை 28

கொழும்பில் பதிவாகும் கொரோனா நோயாளர்களில் 20 முதல் 30 வீதமானவர்களுக்கு டெல்டா திரிபு தொற்றியிருக்கலாம் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் 15

# யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா தொற்றால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளார். யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த உடுவிலைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

# சம்பள முரண்பாடுகளை தீர்க்க போதுமான நிதி பலம் இல்லை!

## கைவிரிக்கின்றது அரசு

கொழும்பு, ஜூலை 28

ஆசிரியர் சம்பள முரண்பாடுகளை தீர்க்கவேண்டிய நிலை காணப்பட்டாலும் நாட்டின் தற்போதைய நிதி நிலைமைகளின் அடிப்படையில் தேவையான மாற்றங்களைச் செய்ய போது 15

# யாழ்.பல்கலைக்கழக மாணவிக்கு தொற்று!

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 140 பேருக்கு யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவர்களில் மாணவி ஒருவர் மட்டும் தொற்றா 15

# வேலணையில் 14 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூலை 28

வேலணையைச் சேர்ந்த 14 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட 15

# வடக்குக்கு வரும் தடுப்பூசிகளை வழங்கும் பணி நாளை ஆரம்பம்

## ஆசிரியர்களுக்கு வதியும் இடங்களிலேயே கிடைக்கும் என்கின்றார் மருத்துவர் கேதீஸ்



யாழ்ப்பாணம், ஜூலை 28

வடக்கு மாகாணத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள 3 இலட்சத்து 75 ஆயிரம் “சினோபார்ம்ஷ” கொரோனாத் தடுப்பூசிகளை 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும், 18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கும், 15

# அமெரிக்காவின் பொருளாதாரத் தடை நாடுகளின் பட்டியலில் இலங்கையும்!

## சீனத் தூதரகம் பரபரப்பு தகவல்

கொழும்பு, ஜூலை 28

அமெரிக்காவினால் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை இணைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தகவல்களை மேற்கோள் காட்டி, இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா ஒரு 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

தனது மனைவி இறந்து போய் விட்டதால் ஒருவர் மறு மணம் செய்து கொள்வது என்று தீர்மானித்தார். அப்பொழுது அவர் 60 வயதை நெருங்கிக் கொண்டிருந்தார்.

முதுமைக் காலத்தில் அவருக்குத் திருமண ஆசை ஏற்பட்டது. அவருடைய நண்பர்களுக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் நண்பர்கள் அவரிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது தங்கள் அதிருப்தியை வெளியிட்டனர்.

“இந்த முதுமைப் பிராயத்தில் உங்களுக்குத் திருமணம் அவசியம்தானா? உங்களுக்கு ஏன் இப்படிப்பட்ட எண்ணம் ஏற்பட்டது?”, என நண்பர்கள் கேட்டனர்.

அவர் அதற்கு சிரிப்புடன் பேசத் தொடங்கினார்.

“நண்பர்களே, உங்கள் அன்பான கருத்துக்கு நான் பதில் சொல்லி ஆக வேண்டும். இளமைப் பருவமோ - முதுமைப் பருவமோ ஆணுக்கு ஒரு பெண் துணை தேவை. நான் முதுமைக் காலத்தில் திருமணம் செய்து கொள்வதற்கு இது ஒரு காரணம். எனக்கு வாய்க்கும் மனைவி நல்லவளாக என்னிடம் அன்பும் ஆதரவும் உள்ளவளாக இருந்தால் முதுமைக் காலத்திலும் நான் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு வழி பிறக்கும் அல்லவா?”, என்றார்.

அவரின் இந்தப் பதிலைப் கேட்ட நண்பர்கள் “நீங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக முதுமைக் காலத்தில் உங்களுக்கு வந்து வாய்க்கும் மனைவி பொல்லாதவளாக இருந்து விட்டால்?”, என்று கேட்டனர்.

அதற்கு அவர், “வயதுதான் ஆகி விட்டதே? இன்னும் கொஞ்ச காலந்தானே அவளுடன் வாழப் போகிறோம் என்று மனதைத் தேற்றிக் கொள்வேன்”, என்றார்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக தமிழ்மொழி தெரியாத ஒருவர் நியமிக்கப்படவிருக்கிறாரென அறிகின்றேன். அதனை உடன் தடுத்து நிறுத்துங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்திருப்பதான செய்தியைப் பார்த்ததும், சற்றுக் குழப்பமாகத்தான் இருந்தது.

இந்த அரசாங்கம் என்னதான் நினைக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லையே என்று எண்ணத்தோன்றியது.

சம்பந்தன் ஐயா, பாராளுமன்றத்திற்கும் செல்லமுடியாத அளவிற்கு உடல்நலம் குன்றிய நிலையில் இருந்தபோது இந்தப் பத்தியிலேயே அவர் தனக்கு அடுத்த தலைவரை இனம்காட்ட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், அவர் திடீரென்று சக்கரநாற்காலியில் பாராளுமன்றம் வந்து எல்லோரையும் ஆச்சரியப்படுத்தினார்.

பின்னர், இந்தியத் தூதுவரைச் சென்று சந்தித்தார். அவரை, அமெரிக்கத் தூதுவர் வீடு தேடிச் சென்று சந்தித்தார்.

தான் அரசியலில் இருந்து இன்னும் விடுபடவில்லை என்பதை அழுத்தமாகச் சொல்லிவந்த சம்பந்தன் ஐயா, கடைசியாக பிரதமர் மஹிந்தருக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

தலைமைச் செயலாளராக சிங்களவர் ஒருவரை - சம்பந்தனின் வார்த்தைகளில் சொல்வதானால், தமிழ்தெரியாத ஒருவரை நியமித்ததைத் தொடந்து எமது தமிழ்த் தேசிய வீரர்கள் எல்லோரும் ஒரு ‘இனிங்ஸ்’ ஆடிமுடிந்த கையோடு, அரச அதிபராகவும் தமிழ் தெரியாத ஒருவர் நியமிக்கப்படவிருக்கிறார் என்ற தகவலை சம்பந்தன் வெளியிட்டபோது, அப்பாடா எமது தலைவகளுக்கு இனிக்கதைப்பதற்கு அடுத்த தலைப்பு கிடைத்துவிட்டது என்று எண்ணத்தோன்றியது.

சம்பந்தன் ஐயாவின் அந்தச் செய்தியை ‘ஈழநாடு’வில் நேற்று வாசகர்கள் படிப்பதற்கு முன்னரே இந்த ஊர்க்குருவி பத்திரிகை அச்சுக்கு போவதற்கு முன்னரே பார்த்திருந்தது. நேற்று முன்தினம் மாலை கூட்டமைப்பின் முக்கிய தலைவர் ஒருவரை சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தது.

அப்போது, இந்த அரச அதிபர் நியமனம் குறித்து சம்பந்தன் ஐயா எமுதிய கடிதம் தொடர்பான செய்தியைச் சொல்லி, அப்படி அரச அதிபரையும் மாற்ற இருப்பதாக சொல்லியிருக்கிறாரே, ஆனால், நாங்கள் அறிந்த வரையில் அப்படி ஒரு நகர்வு நடப்பதாக தெரியவில்லையே? என்றேன்.

அதற்கு அந்தத் தலைவர் சொன்ன தகவலைக் கேட்டு ‘ஹார்ட் அட்ராக்’ வராத குறை.

“சாம் அண்ணர் இப்போது மற்றவர்கள் சொல்வதைச் சரியாகப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில் இல்லை. தலைமைச் செயலர் நியமனம் தொடர்பாக அவருக்கு சொல்லப்பட்டபோது, அவர் அதனை அரச அதிபர் என்று புரிந்து கொண்டுவிட்டார் போலும்...”, என்றார் அந்தத் தலைவர்.

நமது விதியை நொந்துகொள்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

இந்தப் பத்தியில் மேலே சொன்ன கதையில், ‘வயதுதான் ஆகிவிட்டதே? இன்னும் கொஞ்ச காலந்தானே அவளுடன் வாழப் போகிறோம் என்று மனத்தைத் தேற்றிக் கொள்வேன்”, என்று அவர் சொன்னதுதான் இப்போது ஞாபகம் வந்தது.!

**- ஊர்க்குருவி**

# அஸ்ட்ராசெனேகா வருகை தாமதமாவதால் ஆபத்தை எதிர்கொண்டுள்ள 6 லட்சம் பேர்!

கொழும்பு, ஜூலை 28

அஸ்ட்ராசெனேகா முதல் தடுப்பூசியைப் பெற்று நீண்ட காலமாக இரண்டாவது தடுப்பூசியைப் பெறமுடியாமல் காத்திருக்கும் மேல் மாகாணத்தைச் சேர்ந்த 6 இலட்சம் பேரும் நாட்டில் வேகமாகப் பரவி வரும் டெல்டா திரிபால் பாதிக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக முன்னணி சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அஸ்ட்ராசெனேகா முதல் தடுப்பூசியைப் பெற்றவர்கள் இப்போது ஆபத்தை எதிர்கொள்ளும் பிரிவினராக உள்ளனர். முதல் தடுப்பூசி போட்டு பல மாதங்கள் கடந்தவிட்டதால் அவர்களிடையே நேயெதிர்ப்பு சக்தி குறைந்துவிட்டது என பெயர் வெளியிட விரும்பாத முன்னணி சுகாதார நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நோயெதிர்ப்பு சக்தி அனைவருக்கும் சமமாகக் குறையாது. அஸ்ட்ராசெனேகா முதல் தடுப்பூசியைப் பெற்ற இளையவர்கள் இன்னமும் நோய் எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்கலாம். ஆனால் வயதானவர்களிடம் அது குறைவாகவே இருக்கலாம் எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் டெல்டாவிலிருந்து தப்பிக்கொள்ள முதல் தடுப்பூசியைப் பெற்ற அனைவரும் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது அவசியம் எனவும் அந்த சுகாதார நிபுணர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் அஸ்ட்ராசெனேகா முதல் தடுப்பூசிக்கும் இரண்டாவது தடுப்பூசிக்கும் இடையில் 12 வார இடைவெளியைப் பேணிய இங்கி லாந்து போன்ற நாடுகள் ஆபத்தான டெல்டா பரவலை அடுத்து இந்த இடைவெளியை 8 வாரங்களாகக் குறைத்தன.

இலங்கையில் அஸ்ட்ராசெனேகா முதல் தடுப்பூசி போடப்பட்டு கிட்டத்தட்ட 20 வாரங்கள் ஆகின்றன. எனவே, நேயெதிர்ப்பு சக்தி வெகுவாகக் குறைந்து அவர்கள் ஆபத்தை எதிர்நோக்குபவர்களாக உள்ளனர்.

இந்நிலையில் உலக சுகாதார அமைப்பின் கோவாக்ஸ் தடுப்பூசி நன்கொடைத் திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட 10 இலட்சத்தக்கும் அதிகமான அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி வருகைக்காக இலங்கை அரசாங்கம் தொடர்ந்து காத்திருக்கிறது.

ஆரம்பத்தில் ஜூலை 21 க்குள் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி நாட்டுக்கு வரும் என அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் ரோக்கியோவில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியால் அந்த வருகையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார். இந்த மாதத்துக்கு அஸ்ட்ரா செனேகா தடுப்பூசிகள் நாட்டுக்கு வரும் எனவும் அவர் கூறினார்.

முதலில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி போட்டு இரண்டாவது தடப்பூசிக்காக காத்திருப்போருக்கு இரண்டாவதாக பைசர் தடுப்பூசியை போடவுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது. எனினும் அஸ்ட்ராசெனேகா விரைவில் வரும் என்ற அறிவிப்பை அடுத்து அந்த முயற்சி கைவிடப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

கல்வி tv CHANNEL-1

**28.07.2021**

**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | அனைத்துப்பாடங்களும் புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**28.07.2021**

**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
28.07.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஆடி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# மாற்று உபாயத்தை கூற முடியாதவர்கள்!

உலக அரசியலில், அதிகார போட்டி என்பது உலகம் உள்ளவரையில் தொடரும். பலம் பொருந்திய நாடுகளின் இந்த ஆட்டத்தில் சிறிய நாடுகள் எப்போதுமே ஒரு பார்வையாளர் மட்டுமே. பார்வையாளர் என்னும் நிலையை மீறி, இந்த ஆட்டத்திற்குள் பங்குகொள்ள சிறிய நாடுகள் ஆசைப்பட்டால், அதன் விளைவுகளை அந்த நாடுகள் எதிர்கொள்ள நேரிடும். இலங்கைக்கும் இவ்வாறான அனுபவம் உண்டு. உலகம் இரண்டு முகாம்களாகப் பிளவுற்று மோதிக்கொண்டபோது, இந்த இரண்டு நாடுகளில் ஒரு முகாமை சார்ந்து இயங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஆனால், இது ஆபத்தானது என உணர்ந்த நாடுகள் தங்களை அணிசேரா நாடுகள் என்று அடையாளப்படுத்திக் கொண்டன. அதாவது, இரண்டு முகாம்களுடன் நாங்கள் நட்பில் இருப்போம். ஆனால், இரண்டு தரப்பினருடைய அதிகார போட்டிக்குள் வரமாட்டோம். இலங்கை பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இவ்வாறானதொரு நிலைபாட்டை பேணிக் கொள்வதில் உறுதியாக இருந்தது.

ஆனால், 1977இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் அதிகாரத்தை கைப்பற்றி ஜே. ஆர். ஜெயவர்த்தன, அதுவரை இலங்கை கடைப்பிடித்துவந்த அணுகுமுறையிலிருந்து விலகிச் செல்ல முற்பட்டார். இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கவலைகளை புறம்தள்ளி செயல்பட்டார். அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள முற்பட்டார். இந்தியா அப்போது அமெரிக்காவிற்கு எதிரான சோவியத் முகாமுடன் தன்னை இணைத்திருந்தது. இந்த நிலையில் ஜே. ஆரின் அணுகுமுறைகளால் இந்திராகாந்தி தலைமையிலான இந்தியா அதிருப்தியடைந்தது. அப்போது இந்திராகாந்தி தனது கடுமையான நடவடிக்கைகளால் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் மிகவும் இறுக்கமான தலைவராக அறியப்பட்டிருந்தார். இவ்வாறான ஒரு பின்புலத்தில்தான் இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடியாக தலையீடு செய்தது.

ஆனால், இப்போது உலக நிலைமைகள் முற்றிலும் மாறிவிட்டது. அப்போதிருந்த இந்தியா இப்போது இல்லை. இந்த நிலைமைகளை விளங்கிக் கொண்டுதான் தமிழர் தலைமைகள் விடயங்களை உற்றுநோக்க வேண்டும். ஒரு பிராந்திய சக்தி என்னும் வகையிலும், இலங்கையின் உடனடி அயல்நாடு என்னும் வகையிலும் இலங்கையின் ஒவ்வோர் அசைவுகளையும், இந்தியா அவதானித்துக் கொண்டுதான் இருக்கும். சீனாவின் நகர்வுகள் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்காத வரைக்கும், இந்தியாவின் அணுகுமுறைகள் மென்போக்காகவே இருக்கும். ஒரு சில தமிழ் ஆய்வாளர்கள் எண்ணுவதுபோல் இந்தியா கண்களை மூடிக் கொண்டு இருக்கவில்லை. வல்லரசுகள் அப்படி இருப்பதுமில்லை.

ஆனால், இந்த விடயங்களை தமிழர் பிரச்னையோடு ஒப்பிட்டு குழம்பிக் கொள்ளலாமா? தமிழ் சூழலில் அவ்வாறான ஒரு போக்கையும் காண முடிகின்றது. இந்தியாவை நம்பிப் பயனில்லை மாற்று உபாயங்கள் தொடரபில் தமிழர் சிந்திக்க வேண்டும். அமெரிக்காவை நம்பி பயனில்லை மாற்று உபாயங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். இவ்வாறு கூறுபவர்கள் எவருமே அந்த மாற்று உபாயம் என்ன என்று கூறுவதில்லை அல்லது கூறவும் தெரிவதில்லை. தங்களின் கட்டுரைகளை முடிக்கின்றபோது, தமிழர் மாற்று உபாயம் தொடர்பில் சிந்திக்க வேண்டும் என்னும் வசனத்துடன் முடிக்கின்றனர். அந்த மாற்று உபாயம் என்ன? அதனை எவ்வாறு முன்னெடுப்பது? இது பற்றி பேசாமல் வெறுமனே மாற்று உபாயம் என்று உச்சரிப்பதன் பொருள் என்ன? உண்மையில் இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு முன்னால் எந்தவொரு தெரிவும் இல்லை. தேர்தல் அரசியல் கட்சிகள் எவையும் புரட்சிகளை செய்யப் போவதுமில்லை. இந்த நிலையில் இருக்கின்ற மாகாண சபையை பயன்படுத்துவதைத் தவிர வேறு எந்தவொரு வழியும் தமிழ் தலைமைகளுக்கு முன்னால் இப்போது இல்லை. இதற்கும் அப்பால் ஒரு விடயம் இலங்கையில் நிகழுமாயின், அது நிச்சயமாக ஓர் ஆட்சி மாற்றம் மட்டும்தான். அதற்கும் காத்திருக்க வேண்டும்.

# இலங்கை தமிழ் அகதிகள் மீதான ஸ்டாலினின் கரிசனை!

- அலசுவது இராஜதந்திரி -

*இலங்கைத்தமிழ் அகதிகள் குறித்து தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் இரு தினங்களுக்கு முன்னர் தமது கரிசனையை வெளியிட்டுள்ளார்.*

*நாற்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் பூதாகாரமாக மாற்றமடைய ஆரம்பித்ததையடுத்து தமிழகத்தை நோக்கி இலங்கைத்தமிழர்கள் அகதிகளாக தமது உயிரையும் துச்சமென மதித்து பாக்கு நீரிணையைக் கடந்து தமிழகதில் தஞ்சம் புகுந்தனர்.*

*தமிழகத்துக்கு கடல்மார்க்கமாக சென்றபோது அனர்தத்துக்குள்ளாகி பலர் மாண்டுமிருந்தனர். வடக்கு - கிழக்கு நெருக்கடியின் ஆரம்ப கட்டத்தில் தமிழகத்தவர்களின் இலங்கைத்தமிழர்கள் மீதான அனுதாப அலை மிகப்பலமானதாகவே இருந்தது. இதற்கு வலுச்சேர்ப்பது போல இந்திய மத்திய அரசும் இலங்கை அகதிகள் விடயத்தில் தமிழக அரசுக்கு அனுசரணையாக விளங்கியிருந்தது.*

*அன்று தமிழக அரசியலில் முன்னணியில் இருந்ததோடு முதலமைச்சர்களாகவும் இருந்த ஸ்டாலினின் தந்தையார் காலஞ்சென்ற கலைஞர் மு.கருணாநிதி, காலஞ்சென்ற மக்கள் திலகம் எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் உட்பட பழ நெடுமாறன், வை.கோபாலசாமி போன்ற அரசியலாளர்கள்கூட இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக பலமாகவே குரல் கொடுத்திருந்தனர்.*

**மூன்று வகையாக பிரிக்கப்பட்ட அகதிகள்**

*தமிழகத்தில் 1983ஆம் ஆண்டு இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்கள் தஞ்சமடைய ஆரம்பித்தபோது மூன்று வகையாக அவர்கள் வேறுபடுத்தப்பட்டனர்.*

*இவ்வாறு வகைப்படுத்தப்பட்டவர்களில் ஒரு பிரிவினர் முகாம்களில் வைக்கப்பட்டிருந்தனர். இரண்டாவது பிரிவினர் முகாம்களிலன்றி தமக்கு விரும்பிய இடங்களில் வாழ அனுமதிக்கப்பட்டிருந்தனர். மூன்றாவது வகையினர் அகதிகளாக வந்து தீவிரவாத நடவடிக்கைளில் குதித்திருந்தவர்கள்.*

*இலங்கை தமிழ் அகதிகளுக்கென 132 முகாம்கள் தமிழகத்தில் போடப்பட்டிருந்தன. அத்துடன் ஒடிஸா மாநிலத்திலும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு ஒரு முகாம் அமைக்கப்பட்டிருந்தது. ஏறத்தாழ 90 ஆயிரம் இலங்கைத்தமிழ் அகதிகள் தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.*

*தமிழகத்திலும் ஒடிஸாவிலும் இருந்த அனைத்து இலங்கைத்தமிழ் அகதிகள் முகாம்களும் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்கான சுகாதார, உணவு, மருத்துவ மற்றும் அகதிகளின் அன்றாட செலவுகளுக்காக பண உதவிகளும் மத்திய அரசினால் வழங்கப்பட்டிருந்தன.*

*இதுதவிர, இந்தியர்களுக்கு கிடைப்பது போன்றே மிக உயர்ந்த தரத்திலான கல்வி வசதிகளைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்களைப் பெறுவதற்கும் இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு தமிழகத்தில் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.*

**இலங்கை அகதிகள் மீது வெறுப்பு**

*ஆனால் இலங்கைத்தமிழ் அகதிகள் மீதான அனுதாப அலை அனல் காற்றாக 1991ஆம் ஆண்டு இந்திய முன்னாள் பிரதம மந்திரி ராஜீவ் காந்தி தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டதையடுத்து மாற்றமடைந்திருந்தது. இதனால் வெறுமனே அடிப்படை அம்சங்களோடு மட்டும் இலங்கைத் தமிழ் அகதிகள் கவனிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.*



*முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி தமிழீழ விடுதலைப்புலிகளால் மதியூகமற்ற முறையில் கொல்லப்பட்டமை இலங்கை அகதிகள் விடயத்தில் மட்டுமல்ல. வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பொறுத்தவரைகூட பாதகமான மாற்றங்களுக்கே இடமளித்திருந்தது.*

*இப்பாதகமான மாற்றங்கள் 1991ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவும் வடக்கு - கிழக்கு தமிழர்கள்மீது வெறுப்பை வெளிப்படுத்தும் நிலையை உருவாக்கி விட்டிருந்தன.*

*இத்தகைய பின்னணியிலேயே இந்தியாவில் தஞ்சமடைந்திருந்த அப்பாவி தமிழ் அகதிகளின் நிலையும் பின்னாட்களில் கவலைக்குரியதாக மாற்றமடைந்திருந்தது. தமிழகத்தவர்கள் இலங்கைத்தமிழ் அகதிகளை வெறுக்கும் சூழ்நிலைகள் அதிகரித்திருந்தன.*

**ஸ்டாலினின் கரிசனை**

*2009ஆம் ஆண்டு இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவடைந்ததையடுத்து குறிப்பிடத்தக்களவு இலங்கைத்தமிழ் அகதிகள் இலங்கைக்கு திரும்பியிருந்தனர்.*


*இத்தகைய பின்னணியிலேயே தற்போது தமிழகத்தில் எஞ்சியிருக்கின்ற இலங்கைத் தமிழ் அகதிகள் மீது தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலினின் கவனம் திரும்பியுள்ளது. இலங்கைத்தமிழ் அகதிகளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு கூடுதல் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல் என்பவை குறித்து பல நல்வாழ்வுத் திட்டங்களை தமிழக முதலமைச்சர் முன்வைத்துள்ளார்.*

*தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் தொடர்பாக மட்டுமல்ல. இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்னைத் தீர்வுக்காக ஒரு விசேட குழுவொன்றை அமைக்கவும் தமிழக முதலமைச்சர் முன்வந்துள்ளார்.*

*தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் கடந்த 40 வருடங்களில் இலங்கையில் தமது சொத்து, சுகங்கள் உறவுகளைக்கூட இழந்திருக்க முடியும்.*

*இந்நிலையில் அவர்கள் ஒரு பூரணமான மறுவாழ்வை வேண்டி நிற்கின்ற நிலையில் தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலினின் இலங்கைத் தமிழர்கள் மீதான கரிசனை மிகவும் வரவேற்கப்பட வேண்டியதொன்றாகவே காணப்படுகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுலை - 28 புதன்கிழமை
பிலவ வருடம் - ஆடி 12
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : பஞ்சமி




**மேடம்**
எதையும் யோசித்துச் செய்ய வேண்டிய நாள். வீண் பேச்சு வேண்டாம். தன்னம்பிக்கையும் தைரியமும் குறையாமல் கவனமாக இருங்கள். வெளிநாட்டில் வாழும் உறவினரிடமிருந்து தகவல் தேடி வரும்.

**இடபம்**
ஒற்றுமை காரணமாகக் குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். எதிர்பார்த்த லாபம் வரும். பிரியமானவர்கள் பாராட்டுவர். எதிரிகளை விட்டு விலகிச் செல்ல முயற்சி.

**மிதுனம்**
எந்த விஷயத்தையும் முனைப்புடன் செய்து முடிப்பீர்கள். தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சியைத் தரும். கடன் தீரும். மனதில் மகிழ்ச்சி உண்டு. .விலை உயர்ந்த நகை வாங்குவீர்கள்.

**கடகம்**
காதலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி உண்டு. விடாமுயற்சியால் வெற்றி கிடைக்கும். இளைஞர்கள் உற்சாகமுடன் செயல்படுவர். கொடுக்கல் வாங்கல் சிறப்பாக இருக்கும். சேமிப்பு உயரும்.

**சிம்மம்**
அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும். புதிய விஷயம் கற்பீர்கள். வீட்டில் கடன் சுமையைக் குறைக்கப் பொறுப்புடன் பாடுபடுவீர்கள்.எடுத்த முயற்சியை வெற்றிகரமாக முடித்து விடுவீர்கள்.

**கன்னி**
இளைஞர்களின் முயற்சிகளில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். குழந்தைகள் நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். பயம் ஒன்று முடிவுக்கு வரும். விடாமுயற்சியால் பணவரவு உண்டு.

**துலாம்**
பணிச்சுமை குறையும். மனக்கவலை நீங்கி நிம்மதி பிறக்கும். விரயங்கள் அதிகரிக்கும்.. புதிய முயற்சியில் எளிதில் முடியும். கட்டுப்பாடுகள் காரணமாக எரிச்சல் அடைய வேண்டாம்.

**விருட்சிகம்**
அலுவலக வேலைகளில் திட்டமிட்டு செயல்பட்டு நிம்மதியடைவீர்கள். வெளிநாடு செல்ல முயல்பவர்கள் வெற்றி கிடைக்கப் பெறுவர். பேச்சைக் குறைத்துச் செயலில் அக்கறை காட்டுவது நல்லது.

**தனுசு**
கடந்த நாட்களில் இருந்த மன உளைச்சல் நீங்கும். வீண் விரயம் அதிகரிக்கும். திட்டமிட்ட பணிகளை எளிதில் முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். நீண்ட கால சிக்கல் தீரும்.

**மகரம்**
சுபவிஷய பேச்சில் நல்ல முடிவு கிடைக்கப் பெறுவீர்கள். திடீர் திருப்பம் ஏற்படும். சந்திக்க விரும்பிய நபரைச் சந்திப்பீர்கள். பகைவர்கள் அன்புக்குரியவராக மாறி வருவர். நண்பர்கள் உதவுவர்.

**கும்பம்**
சக ஊழியர்களின் ஆதரவை உதாசீனம் செய்ய வேண்டாம். மன உளைச்சல் நீங்கி மகிழ்ச்சி நிலவும். சுபவிஷயத்தில் அனுகூலம் உண்டு. பொறுமை இழந்து மற்றவர்களிடம் பேச வேண்டாம்.

**மீனம்**
தனிப்பட்ட விஷயங்களை யாரையும் நம்பிப் பகிர வேண்டாம். வெளியூரிலிருக்கும் மகன், மகள் ஆதரவாகச் செயல்படுவார். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள்.

# உள்துறை அமைச்சர் அமித்ஷாவுடன் பன்னீர், எடப்பாடி டில்லியில் பேச்சு

## சசிகலா விவகாரம் குறித்தும் ஆராய்வு

புதுடில்லி, ஜுலை 28

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுடன் அரசியல் ரீதியாக எதுவும் பேசவில்லை என எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறினார். இருந்த போதிலும், சசிகலா விடயம் குறித்து இச்சந்திப்பில் முக்கிய மாகப் பேசப்பட்டதாக டில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

தனித்தனியாக புதுடில்லி புறப்பட்டுச் சென்ற அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி, ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் பிரதமர் மோடியை சந்தித்துப் பேசினர்.

அதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை டில்லி நாடாளுமன்ற வளாகத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து பேசினர். இந்த சந்திப்பில் தமிழகத்தின் அரசியல் சூழல், கட்சி சார்ந்த பிரச்னைகள் குறித்து பேசியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சந்திப்பின் போது முன்னாள் அமைச்சர் வேலுமணி, அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன், தளவாய் சுந்தரம் மற்றும் எம்.பிக்கள் நவநீத கிருஷ்ணன், தம்பிதுரை, ரவீந்திர நாத்குமார், சந்திரசேகர் உள்ளிட்டோரும் உடன் இருந்தனர்.

அமித் ஷாவுடனான சந்திப்புக்கு பின்னர் பேட்டி அளித்த எடப்பாடி பழனிசாமி, “மரியாதை நிமித்தமாக மத்திய அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தோம். மத்திய உள்துறை மந்திரி அமித் ஷாவிடம் அரசியல் ரீதியாக எதுவும் பேசவில்லை. பிரதமர் மோடியிடம் என்ன பேசினோம் என்று அமித்ஷாவிடம் கூறினோம்” என கூறினார்.



இருந்தபோதிலும், சசிகலா விவகாரம் தொடர்பில் இதன் போது முக்கியமாக ஆராயப்பட்டதாக டில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

அ.தி.மு.கவில் சசிகலா தற்போது ஏற்படுத்தி வரும் குழப்பங்களின் பின்னணியில் பா.ஜ.க. உள்ளதாகக் கூறப்படும் நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

---

# நடிகர் விஜய்க்கு ஒரு லட்சம் அபராதம் விதித்த உத்தரவுக்கு நீதிமன்றம் தடை!

சென்னை, ஜுலை 28

நடிகர் விஜய்க்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்த உத்தரவுக்கு தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2012ம் ஆண்டு பிரிட்டன் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ‘ரோல்ஸ் ராய்ஸ் கோஸ்ட்’ காருக்கு, நுழைவு வரி செலுத்துவதில் இருந்து விலக்கு கேட்டு, நடிகர் விஜய் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தனி நீதிபதி எஸ்.எம். சுப்ரமணியம் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, விஜய் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு விஜய்க்கு ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த அபராத தொகையை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு அளிக்கும்படியும் தெரிவிக்கப்பட்டது. மேலும், வரி என்பது கட்டாயமாக வழங்க வேண்டிய பங்களிப்பு, நன்கொடை அல்ல, நடிகர்கள் உண்மையான ஹீரோக்களாக இருக்க வேண்டும், ரீல் ஹீரோக்களாக இருக்கக் கூடாது எனவும் காட்டமாக தெரிவித்தார்.

இந்நிலையில், தனி நீதிபதி விதித்த தீர்ப்பை எதிர்த்தும், தான் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களை நீக்க கோரி சென்னை உயர் நீதிமன்றில் விஜய் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கில் விஜய் தரப்பில் நேற்று முன்வைக்கப்பட்ட வாதத்தில், ரோல்ஸ் ராய்ஸ் காருக்கு நுழைவு வரி செலுத்த வேண்டும் என்கிற உத்தரவை எதிர்க்கவில்லை, அதை மதிக்கிறோம். ரோல்ஸ் ராய் காருக்கு நுழைவு வரி செலுத்த தயாராக இருக்கிறோம்” என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நடிகர் விஜய் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவுக்கு பதிலளிக்க தமிழக அரசுக்கு அறிவித்தல் அனுப்பியதோடு, நடிகர் விஜய்க்கு ரூ. 1 லட்சம் அபராதம் விதித்த உத்தரவுக்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

---

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற தலைவராகிறார் சாலமன் பாப்பையா

சென்னை, ஜுலை 28

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற தலைவராக பேராசிரியர் மற்றும் பட்டிமன்ற நடுவரான சாலமன் பாப்பையா தேர்வு செய்யப்பட இருக்கிறார்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக பொறுப்பேற்ற நிலையில், இயல் இசை நாடக மன்ற தலைவர் பொறுப்பு உட்பட பல்வேறு பொறுப்புகளுக்கு புதியவர்களை நியமிக்க திட்டமிட்டுள்ளார் என தெரிகிறது.



அதன்படி, இயல் இசை நாடக மன்ற தலைவர் பொறுப்புக்கு பேராசிரியர் மற்றும் பட்டிமன்ற நடுவரான சாலமன் பாப்பையாவை மு.க. ஸ்டாலின் தேர்வு செய்திருப்பதாக கூறப்படுகிறது. இதுபற்றி வருகிற ஒகஸ்ட் மாதத்தில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்படுகிறது. கடந்த 22 ஆம் திகதி, சென்னையில் உள்ள முகாம் அலுவலகத்தில் தமிழக முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலினை சாலமன் பாப்பையா சந்தித்து பேசியது குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் 9 மடங்கால் அதிகரித்துள்ள வாய் புற்றுநோயாளர் எண்ணிக்கை

கொழும்பு, ஜூலை 28

**கடந்த இரண்டு தசாப்தங்களில் நாட்டில் வாய் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 மடங்கினால் அதிகரித்துள்ளதாக தேசிய புற்றுநோய் ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.**

ஒவ்வொரு வருடத்திலும் வாய் புற்றுநோயினால் புதிதாக 2,700 பேர் பாதிக்கப்படுவதாக தேசிய புற்றுநோய் ஒழிப்புப் பிரிவுப் பணிப்பாளர், பொது சுகாதார விசேட வைத்திய நிபுணர் ஜானகி விதானபத் திரண தெரிவித்துள்ளார். வாய் புற்றுநோயை இல் லாதொழிக்கும் நோக்கில் தலை மற்றும் கழுத்து தொடர்புடைய புற்றுநோய் நாள் நேற்று நினைவு கூரப்பட்டது.

'வாய் சுகாதாரத்தைப் பேணுவதற்கு பாக்கு பாவனையை நிறுத்துவோம்' எனும் தொனிப் பொருளில் மக்களை விழிப்பு ணர்வூட்டும் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய புற்று நோய் ஒழிப்புப்பிரிவு பணிப் பாளர், பொது சுகாதார விசேட வைத்திய நிபுணர் ஜானகி விதானபத்திரண மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு சாலைப் பகுதியில்

## விறகு வெட்டச் சென்றவர் வெடிவிபத்தில் படுகாயம்!

முல்லைத்தீவு, ஜூலை 28

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சாலைப் பகுதியில் விறகு வெட்டச் சென்றவர் வெடி விபத்தில் சிக்கிப் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

அந்த பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவர் மரம் ஒன்றின் அடிப்பகுதியை வெட்ட முற்பட்டபோது வெடி விபத்து நிகழ்ந்ததாக தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த அவர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை மாவட்ட வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## அரிசி வகைகளின் விலை அடுத்த வாரம் குறையும்

கொழும்பு, ஜூலை 28

அரிசி ஆலை உரிமையாளர்களுடன் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தத்திற்கு அமைவாக அரிசி வகைகளின் விலைகள் அடுத்த வாரமளவில் குறைக்கப்படும் என அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

அதற்கமைய இதற்கான உடன்படிக்கையொன்று கைச்சாத் திடப்படவுள்ளதாகவும் அவர் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கும் வகையிலான சட்ட ஏற்பாடு



பாராளுமன்றத்தில் அடுத்த வாரம் நிறைவேற்றப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, நாட்டின் 80 சதவீதமான மக்கள் பயன்படுத்தும் நாடு அரிசியின் விலையை 100 ரூபாவை விட குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே கூறினார்.

## சீரற்ற காலநிலை தொடரும்

கொழும்பு, ஜூலை 28

நாட்டின் சில பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை தொடர்ந்தும் நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

குறிப்பாக மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

சில இடங்களில் 50 மி.மீ. அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி பதிவாகுமெனவும் திணைக்களம் கூறியுள்ளது.

அத்தோடு, வடமேல் மாகாணத்தில் தொடர்ச்சியாக மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதேநேரம், மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்தகாற்று வீசக்கூடுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

## மற்றொரு சிறுமி மர்ம மரணம் இறம்பொடையில் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூலை 28

கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறம்பொடை, மேல் கடைவீதி பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து, 15 வயதுச் சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் மீதான பிரேத பரிசோதனை நாவலப்பிட்டி வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் விக்னேஸ் வரன் விதுஷா (வயது-15) என்பவராவார்.

இந்த சிறுமி தனது வீட்டில் தனி அறையிலிருந்து சடலமாக காணப்பட்டுள்ளார்.

இதையடுத்து, நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை அதிகாலை 04 மணியளவில் சிறுமியின் பெற்றோர் 119க்கு அழைப்பை ஏற்படுத்தி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாகவும் தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சிறுமியின் சடலத்தை மீட்டதாகவும் கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

## கௌதாரிமுனையில் 16 மீனவர்களுக்கு கடலட்டைப் பண்ணை அமைக்க உதவி

கிளிநொச்சி, ஜூலை 28

பூநகரி, கௌதாரிமுனையில் கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் பணிகள் பிரதேச கடற்றொழிலாளர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கு அமைய நக்டா நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட 16 இடங்களில் பண்ணைகளை அமைக்கும் பணிகள் முதற்கட்டமாக நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கான பயனாளர்கள் கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அடையாளப் படுத்தப்பட்ட இடங்களில் பண்ணைகளை அமைப்பதற்கு தேவையான வலைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு தொகுதி வலைகள் வழங்கப்பட்டன.

## கரவெட்டியில் ஒருபகுதி முடக்கம்!

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடமராட்சி கரவெட்டியில் ஒரு பகுதி நேற்று அதிகாலை முதல் சமூக முடக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

கரவெட்டி தெற்கில் ஆலய திருவிழா நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிருந்த 49 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே கரவெட்டி தெற்கில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியான மத்தொனி கிராம சேவகர் பிரிவு (J/366) சமூக முடக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத் திருவிழாவில் பங்கேற்றவர்களுக்கு பிரசாதம் வழங்கியவர் நோய் அறிகுறிகளுடன் காணப்பட்டதாக விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## 45 போத்தல் கசிப்புடன் நேற்று கிளிநொச்சில் இருவர் கைது!

கிளிநொச்சி, ஜூலை 28

45 போத்தல் கசிப்புடன் இருவர் மாவட்ட பொலிஸ் விசேடமது ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட பொலிஸ் விசேடமது ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது கசிப்பு மீட்கப்பட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று காலை கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மது உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்காக எடுத்து செல்லப்பட்ட நிலையில் பொலிஸார் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஒருவரிடம் 25 போத்தல் கசிப்பும், மற்றைய நபரிடம் 20 போத்தல் கசிப்பும் இருந்ததாகவும் இருவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.



## வைரவர் சிலை விற்க முயன்ற இருவர் வவுனியாவில் கைது!

வவுனியா, ஜூலை 28

பழமை வாய்ந்த வைரவர் வடிவிலான சிலையை விற்பனை செய்ய முயன்ற இருவர் வவுனியா பிராந்திய போதைத் தடுப்புப் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய வவுனியா நெளுக்குளம் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஓட்டோ ஒன்றை வழிமறித்து சோதனை செய்தனர்.

இதன்போது பெறுமதி வாய்ந்த வைரவர் சிலை ஒன்றை மீட்டதுடன், அந்த ஓட்டோவில் பயணித்த இரண்டு நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்கள் குறித்த சிலையை விற்பனை செய்யும் நோக்கத்தில் வந்திருக்கலாம் எனப் பொலிஸாரால் சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# அமெரிக்காவில் உள்ளதை போன்று ஜனாதிபதிக்குப் பிரத்தியேக அறை

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஊடக சந்திப்பை நடத்துவதற்கு என அமெரிக்காவை போன்ற பிரத்தியேக அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகவியலாளர் கலந்துகொண்டு ஜனாதிபதியை அல்லது அவரது ஊடகப் பேச்சாளரிடம் கேள்விகளைக் கேட்கும் வகையில் இந்த அறை அமைக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களுடன் நேரடியாக தொடர்புகொள்வதற்கும் தவறான தகவல்கள் பரவாமல் தடுக்கவும் இந்த அறை பயன்படுத்தப்படும் என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வாராந்த ஊடக சந்திப்புகள் அங்கு நடைபெறும் என்றும் அதற்காக அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் அழைக்கப்படுவார்கள் என்றும் கிங்ஸ்லி ரத்நாயக்க குறிப்பிட்டார்.

# நாட்டில் எந்தவொரு பகுதியிலும் 20 வீதமானோருக்கு கொரோனா!

## அரச தாதியர் சங்கம் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜூலை 28**

**நாட்டில் ஒரு கிராமம் அல்லது ஒரு தொழிற்சாலையை தேர்ந்தெடுத்து அங்கு பணியாற்றும் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொண்டால் அங்கு 15 முதல் 20 வீதமானோருக்கு தொற்று உறுதியாகும் என அரச தாதியர் சங்கம் அரசாங்கத்துக்கு சவால் விடுத்துள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அந்த சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய இந்த சவாலை விடுத்துள்ளார்.

அவ்வாறு மேற்கொள்ளப்படும் பரிசோதனையில் 15 தொடக்கம் 20 வீதமானோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுமாயின், தேசிய மருத்துவமனையில் பணியாற்றும் 10,000 ஊழியர்களில் 20 சதவீதமானவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கும் எனவும் அவர் தெரவித்தார்.

தற்போதைய நிலையில் மக்கள் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு பதிலாக கொரோனாவுடன் வாழ்வதற்கு பழகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது நாட்டில் குறைந்த எண்ணிக்கையிலான மக்களுக்கே கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாகவும், பரிசோதனைகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே நோயாளர்களின் எண்ணிக்கை மதிப்பிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் போது, அவரது குடும்பத்தினருக்கு கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. அத்துடன் குறைவான பரிசோதனைகளை மேற்கொண்டு குறைந்தளவான கொரோனா நோயாளர்கள் பதிவாகுவதாகவும் அரசாங்கம் தெரிவிக்கிறது.

இவ்வாறான செயல்பாடுகளை மேற்கொண்டு அரசாங்கம் கொரோனாவுடன் வாழ முயற்சிப்பதாகவும் அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் விசாரணை

கொழும்பு, ஜூலை 28

பொது இடங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பாக ஆராயுமாறு நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவர் தனுஷ்க தில்ஷான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளித்திருந்தார்.

இதற்கமைய, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளுக்கு எதிராக நோய் பரவும் வகையில் செயற்படுபவர்கள் குறித்து ஆராயப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமணமாகி 10 மாதத்தில் கிணற்றில் சடலங்களாக மிதந்த இளம் தம்பதியர்

முல்லைத்தீவு, ஜூலை 28

மல்லாவிப் பகுதியில் கிணற்றில் விழுந்து கணவன் மனைவி இருவரும் உயிரிழந்துள்ளனர்.

அதே இடத்தை சேர்ந்த றஞ்சன் பிரதீபன் (வயது-31), பிரதீபன் மாலினி (வயது-27) ஆகியோரே உயிரிழந்தவர்களாவார் .நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் இரு வரும் கிணற்றில் விழுந்ததாக தெரிவிக்கப்ப டுகிறது.

அவர்கள் தாமே கிணற்றுக்குள் பாய்ந்தார்களா அல்லது ஏதேனும் குற்றச்செயல்களா என்பது இதுவரை உறுதியாகவில்லை.

குறித்த இருவரும் திருமணத்துக்கு முன்னர் பிரதேச வெதுப்பகம் ஒன்றில் கடமையாற்றியபோது திருமணம் செய்துள்ளனர்.

குறித்த இருவரும் திருமணமாகி 10 மாதங்கள் கடந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# பி.சி.ஆர் சோதனையில் வலி ஏற்பட்டுவிட்டதாம்

## தாதியின் உச்சந்தலையில் பீங்கானால் தாக்கிய பிக்கு

கொழும்பு, ஜூலை 28

பி.சி.ஆர் பரிசோதனையின்போது வேதனை ஏற்பட்டதால் ஆத்திரமடைந்த பிக்கு, பரிசோதனை மேற்கொண்ட தாதியை பீங்கானினால் தாக்கியுள்ளார். படுகாயமடைந்த தாதி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சிலாபம், ஆனமடுவ ஆதார வைத்தியசாலையில் கொவிட் பிரிவில் பணியாற்றிய தாதியொருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

காய்ச்சல் மற்றும் தடிமன் காரணமாக ஆனமடுவ ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பிக்குவுக்கு குறித்த தாதியினால் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்போது, தனக்கு வலி ஏற்பட்டதாக கூறி, அருகிலிருந்த கண்ணாடிப் பீங்கானைக் கொண்டு தாதியை தாக்கியுள்ளார் பிக்கு.

காயமடைந்த தாதி சிகிச்சைகளுக்காக அதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தாதியை தாக்கிய பிக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கொழும்பில் வேகமாக பரவிவருகிறது ‘டெல்டா’

கொழும்பு, ஜூலை 28

நாட்டில் தற்போது அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் 30 வீதமானோர் ‘டெல்டா’ தொற்றாளர்கள் என பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொழும்பில் அடையாளம் காணப்படும் கொவிட் தொற்றாளர்களில் 20 முதல் 30 வீதமானோர் டெல்டா தொற்றாளர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு, தெற்கு, கிழக்கு உட்பட நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் டெல்டா பரவல் காணப்படுவதாகவும், இந்த வைரஸ் பரவலை தடுப்பதற்கு, சுகாதார வழிமுறைகளை உரிய வகையில் கடைப்பிடிக்குமாறும் அவர் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

## வவுனியா இரட்டைக் கொலை;

# 11 வருடங்களின் பின்னர் சந்தேகநபர் சிக்கினார்

வவுனியா, ஜூலை 28

இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் 11 வருடங்களின் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுளார்.

வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் கடந்த 2011 ஆம் ஆண்டு கணவன் மனைவி ஆகியோர் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த கொலைச்சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இருவர் அந்தக் காலப் பகுதியில் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.ஆயினும் குறித்த இருவரும் நீதிமன்ற வழக்குத் தவணை களில் ஆஜராகமல் தலை மறைவாகியிருந்தனர்.

அவர்களில் ஒருவர் ஓமந்தை பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப் பட்டார். 11 வருடங்களின் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலஞ்ச ஊழல் வழக்கிலிருந்து நிசங்க சேனாதிபதி விடுதலை

கொழும்பு ஜூலை 28

இலஞ்ச ஊழல் வழக்கில் இருந்து அவன்கார்ட் நிறுவன தலைவர் நிசங்க சேனாதிபதி மற்றும் பாலித்த பெர்ணான்டோ ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, வழக்கை தொடர முடியாது என்றும் பிரதிவாதிகள் எழுப்பிய முதற்கட்ட ஆட்சேபனையை நிராகரித்ததாக சுட்டிக்காட்டினார்.

இந்த முடிவை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்துள்ளதாகவும், ஜூலை 15ஆம் திகதி மனு மீதான விசாரணை வரும்போது வழக்கு திரும்பப் பெறப்படும் என்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அந்த நிபந்தனைக்கு உட்பட்டு, அவரது தரப்பினர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்த திருத்த மனுவை மீளப் பெற்றதாக சட்டத்தரணி அஜித் பத்திரன தெரிவித்தார்.

(அ)

# செப்ரெம்பர் மாதத்தின் பின் நாட்டை திறப்பதற்கு ஏற்பாடு

## ஜனாதிபதி கோட்டாபய கூறுகிறார்

கொழும்பு ஜூலை 28

**எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் நாட்டை முழுமையாக திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாத இறுதிக்குள் மேலும் 10.5 மில்லியன் தடுப்பூசி இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை 80 வீதம் வரையில் நிறைவடைந்துள்ளதாகவும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார்.



தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையை கருத்திற் கொண்டு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நாடு முழுமையாக திறக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# மேலும் 1.6 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் இலங்கைக்கு வந்தன

கொழுபு ஜூலை 28

மேலும் 1.6 மில்லியன் டோஸ் சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசிகள் நேற்று செவ்வாய்க்கிழமை இலங்கையை வந்தடைந்துள்ளன.

சீனாவில் இருந்து விசேட விமானமொன்றின் மூலம் இந்த தடுப்பூசிகள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டன. கடந்த 22 ஆம் திகதி சினோ போர்ம் தடுப்பூசியின் 2 மில்லியன் டோஸ் கொரோனா தடுப்பூசிகள் இலங்கையை வந்தடைந்தன.

சீனாவிடமிருந்து 600,000 டோஸ் தடுப்பூசிகள் இலங்கைக்கு நன்கொடையாக கிடைத்தமையை அடுத்து மீதமுள்ள தடுப்பூசிகள் அனைத்து சீன உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# பருத்தித்துறை நகரத்தில் மேலும் ஐவருக்கு தொற்று

யாழ்ப்பாணம் ஜூலை 28

வடமராட்சி பருத்தித்துறை நகரில் மேலும் ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை நகரில் வர்த்தக, வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் மற்றும் ஓட்டோ சாரதிகளுக்கு நேற்று காலை முதல் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இதுவரை ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் அருவிக்கு தெரிவித்தனர்.

பருத்தித்துறை நகரில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் மூவருக்கும், ஓட்டோ சாரதிகள் இருவருக்கும் இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

(அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் 68 பேருக்கு தொற்று

மட்டக்களப்பு, ஜூலை 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 68 கொரனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24மணி நேரத்தில் 68கொரனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 22பேரும்,

செங்கலடி வைத்திய அதிகாரிகள் பிரிவில் 11பேரும்,

வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 10பேர் உட்பட 68பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 8275கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 116பேர் உயிரிழந்துள்ளதுடன் 755பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

இறப்புகளில் 69வீதமான இறப்பானது 60வயதுக்கும் மேற்பட்டவர்களாகவுள்ளனர்.

மூன்றாவது அலை காரணமாக 7292பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் 107மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் 320221 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. இதுவரை 142,754 கொவிட் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 30வயதுக்கு மேற்பட்டவர்கள் 311,000பேர் உள்ளனர்.

இவர்களில் 46வீதமானவர்களுக்கு இதுவரையில் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதேச வைத்திய சாலைகள், ஆதார வைத்திய சாலைகளில் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

அத்துடன் அப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள்,பொது இடங்களிலும் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலும் ஒரு இலட்சம் தடுப்பூசிகள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கிடைக்கப் பெறவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர்.

பெரும்பாலான ஆசிரியர்கள் முதலாவது கொவிட் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இரண்டாவது தடுப்பூசி ஒரு மாதத்துக்கு பின்னர் வழங்கப்படும்.

வெளிநாடு செல்லவுள்ளவர்கள் வேறு தடுப்பூசிகளைப் பெறவேண்டுமானால் அவர்கள் ஒன்லைன் மூலம் விண்ணப்பம் செய்து அதனைப் பெற்றுக் கொள்ளமுடியும்-என்றார்.

# வலி.கிழக்கு பிரதேச சபையில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்

யாழ்ப்பாண ஜூலை 28

கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வுகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் நேற்றுக் காலை 9 மணிக்கு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், பணியாளர்களின் பங்கேற்புடன் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வெலிக்கடை சிறையில் 1983 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட தலைவர்களான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், உட்பட 53 அரசியல் கைதிகளுக்கும் அவ்வேளை படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்குமாக இரண்டு நிமிடம் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொது ஈகச்சுடர் தவிசாளரினால் ஏற்றி வைக்கப்பட்டு உரை நிகழ்த்தப்பட்டது.

படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல அவர்களை நினைவு கூர்வதும் இராணுவ மயமாக்கலின் ஊடாக தடை செய்யப்படுகின்றது. இன்றைய தினம் கூட(நேற்று) சுகாதார நடைமுறைகளுக்கு முழுமையாக மதிப்பளித்து நினைவேந்தலினை நாம் செய்ய முற்பட்டபோது காலையில் பொலிஸார் எமது அலுவலகம் முன்பாக நோட்டமிடுகின்றனர்.

அதுபோன்று இராணுவப் புலனாய்வாளர்கள் அலுவலக வாசலில் காத்து நிற்கின்றனர். இதை அடுத்து பல உறுப்பினர்கள் அச்சத்தின் நிமித்தம் இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை.

உலகம் அறிந்த கறுப்பு ஜூலை போன்ற இனவாதத் தாக்குதல்கள் இனியும் தமிழ் மக்கள் மீது முடுக்கிவிடக் கூடாது என்பதற்காகவும் எமது நினைவு கூர்தல் சுதந்திரத்தை பாதுகாப்பதற்காகவும் அனுஷ்டிக்கின்றோம். ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் முழுமையான அனுசரணையோடு எமது மக்கள் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் வரையில் மிகக் கெடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். எமது தலைவர்கள் சிறையில் கண்கள் தோண்டப்பட்டு கொல்லப்பட்டனர். தமிழ் மக்களின் சொத்துக்கள் வாக்காளர் இடாப்பில் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. இடிப்படையில் இவைகள் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள். இவை போன்று தமிழர் வரலாற்றில் ஏராளமான கொடுமைகள், மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. இவை எதற்கும் 38 ஆண்டுகள் கடந்தபோதும் எமக்கு நீதி வழங்கப்படவில்லை.

இனி நடைபெறாது என்பதற்கும் உத்தரவாதமில்லை என்ற நிலைமையினையே இனத்திற்கு மறுக்கப்படும் நீதி உணர்த்துவதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.



# வாழ்க்கைச்செலவு அதிகரிப்பும் கூட்டுறவின் கூப்பன் திட்டமும்



**கா. சுகன்ஜா**

தற்போது உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 நோய்த்தொற்று மற்றும் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அரசினால் முன்னெடுக்கப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பல சமூக மற்றும் பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. முறைசார், முறைசாரா தனியார்துறைகளில் பணிபுரிபவர்கள் வேலைவாய்ப்புக்களை இழக்கின்றனர். குறிப்பாக, நாளாந்த கூலிவேலைகளில் ஈடுபடுபவர்கள், பெண்தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானமீட்டும் குடும்பங்களின் வாழ்க்கைநிலை மிகவும் பாதிப்படைந்துள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான தடை, உணவுப் பொருட்களின் பதுக்கல் போன்றவற்றால் நியாயமான விலையில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான வழிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அப் பொருட்களின் சந்தை விலை சடுதியாக அதிகரிக்கிறது. இந்த நிலை நிரந்தர வருமானங்களை பெறுபவர்கள் மற்றும் நடுத்தர குடும்பங்களுக்கே சவாலானதாக மாறும்போது அன்றாடம் கூலிவேலைசெய்து அதில் கிடைக்கும் வருமானத்தில் வாழும் மக்களை அன்றாட உணவுத் தேவைகளைக்கூட பூர்த்திசெய்யமுடியாத நிலைக்கு தள்ளியுள்ளது. அவர்களின் அத்தியாவசிய உணவுத் தேவைகளை அரசாங்கத்தால் வழங்கப்படும் சிறியளவிலான நிவாரணங்களுக்கூடாக மட்டும் பூர்த்தி செய்ய முடியாது என்பது வெளிப்படையான உண்மை. இப்படியான நிலையில் அந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளை நியாயமான விலையிலும் தொடர்ச்சியாகவும் பூர்த்தி செய்வது யார்?

தற்போது ஏற்பட்டுள்ளது போன்ற ஒரு சூழலில் இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டின்போதும் இலங்கையின் யுத்தகாலங்களிலும் பங்கீட்டு அடிப்படையில் உணவு விநியோகிக்கும் பொறுப்பு நுகர்வோர் கூட்டுறவுத் துறையிடமே ஒப்படைக்கப்பட்டது. இந்த நுகர்வோர் கூட்டுறவுச்சங்கங்கள் ஜனநாயக அடிப்படையில் பண இலாபத்தை விட சேவையை நோக்காக கொண்டு உத்தரவாத விலையில் பொருட்களை விற்பனை செய்து சாதாரண மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்த வரலாறு உள்ளது.

**நுகர்ச்சிக்கூட்டுறவின் முயற்சி**

கடந்த வருடம் கொரோனா நெருக்கடி காரணமாக நாடளாவியரீதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட போது நுகர்ச்சிக்கூட்டுறவு சங்கங்கள் சிறு கிராமங்களில்கூட லொறிகளில் அத்தியாவசிய பொருட்களை கொண்டு சென்று விநியோகப்படுத்தினார்கள். மேலும் தற்போதைய நுகர்ச்சி பிரச்சினைக்கான மாற்றுத்தீர்வை உருவாக்கும் முகமாக வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஒரு முயற்சியை முன்னெடுத்துள்ளது. அந்த வகையில் வடக்கில் உள்ள கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக அன்றாட கூலிவேலைசெய்யும் மற்றும் குறைந்த வருமான மீட்டும் நுகர்வோருக்கு நியாயமான விலையில் அத்தியாவசிய பொருட்களை ஒரு மாதத்திற்கு ஆகக்கூடியது ரூபா. 10,000 வரைக்கும் கடன் அடிப்படையில் கூட்டுறவு சங்கங்களுக்கூடாக விநியோகிக்கும் "நுகர்வியம்" எனும் கூப்பன் திட்டத்தை 2020ம் ஆண்டு ஜூன் மாதத்தில் அறிமுகப்படுத்தியது. ஆரம்பத்தில் 3 கூட்டுறவுச் சங்கங்களுடன் ஆரம்பித்த இத்திட்டத்தில் தற்போது 7 கூட்டுறவுச்சங்கங்கள் இணைந்துள்ளன. பொருட்களின் தரம், விலை மற்றும் தொடர்ச்சியாக கிடைக்கக் கூடியதன்மை போன்றவை கவனத்தில் கொள்ளப்பட்டு சங்கக்கடைகள் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றன. மேலும் பொருள் கொள்வனவின்போது அத்தொகையின் 3% சேமிப்பாக கூட்டுறவுகளால் உரிய நபர்களின் கிராமிய வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படுகிறது.

**தற்போது ஏற்பட்டுள்ளது போன்ற ஒரு சூழலில் இரண்டாம் உலக யுத்தகாலத்தில் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டின் போதும் இலங்கையின் யுத்த காலங்களிலும் பங்கீட்டு அடிப் படையில் உணவு விநியோகிக் கும் பொறுப்பு நுகர்வோர் கூட்டுறவுத்துறையிடமே ஒப்ப டைக்கப்பட்டது. இந்த நுகர் வோர் கூட்டுறவுச்சங்கங்கள் ஜனநாயக அடிப்படையில் பண இலாபத்தை விட சேவையை நோக்காக கொண்டு உத்தரவாத விலையில் பொருட்களை விற் பனை செய்து சாதாரண மக்க ளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்த வரலாறு உள்ளது.**

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட நிறைவில் மீளாய்வு செய்யப்பட்டு இத்திட்டத்தில் இணைந்துள்ள அங்கத்தவர்களின் கருத்துக்கள் திரட்டப்பட்டது. அதற்கமைவாக நாளாந்த வருமானத்தை தினமும் பெற்றுக் கொள்ள முடியாத பல குடும்பங்கள் காசுக்கு பொருட்களை கொள்வனவு செய்யமுடியாத நிலையில் தனியார் கடைகளில் கடன் கொள்வனவுகளை செய்கிறார்கள். இந்த மக்களின் இயலாமைகளை பயன்படுத்தி தனியார் கடைக்காரர்கள் பணரீதியாக அவர்களை சுரண்டுவதும் உரிய காலத்தில் கடனை மீளச்செலுத்தத் தவறும்போது அவமரியாதைப்படுத்துவதும் நடைபெறுகின்றது. இந்த நிலையில் இப்படி ஒரு திட்டம் இருப்பது அவர்களின் அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களை கடனடிப்படையில் இலகுவாகவும் தொடர்ச்சியாகவும் பூர்த்தி செய்துகொள்வதற்கும், கடன் கொள்வனவுகளின்போதான தனியார் கடைக்காரர்களின் சுரண்டல்களில் இருந்து விடுபடுவதற்கும், மேலும் அவர்களின் சுயமரியாதைகளை பேணுவதற்கும் உதவியாக இருப்பதாக அவர்களால் கூறப்பட்டது.





மேலும் சில பெண்தலமைத்துவ குடும்பங்களை பொறுத்தவரை அவர்கள் வேலைக்கு செல்வதில்லை வீட்டில் கோழிகள் வளரத்தல், வீட்டுத்தோட்டம் செய்தல் என்பவற்றுடன் சமுர்த்தி திட்டத்திற்கூடாக கிடைக்கும் உதவித்தொகையில் தங்களது குடும்ப செலவுகளை ஈடு செய்கிறார்கள். இவ்வாறானவர்கள் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கு முகம்கொடுக்கும் போது அன்றாட உணவுகளைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையை எதிர்நோக்குவார்கள். இவர்களை பொறுத்தவரையில் இப்படி ஒரு திட்டத்தில் தாங்கள் இணைந்திருப்பதால் அத்தியாவசிய பொருட்களையாவது தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளதெனக் கூறுகிறார்கள்.

அத்துடன் சேமிப்பு மிகவும் அவசியமானது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடையமாக இருந்தாலும் குறைந்த வருமானத்தை பெறும்போது அதே நேரம் செலவுகளும் தொடர்ச்சியாக அதிகரிக்கும்போது இந்த மக்களுக்கு சேமிப்பு செய்வதென்பது மிகவும் கஷ்டமானது. ஆனால் தங்களுக்காக ஒரு அமைப்பு சேமிப்பை செய்வது எதிர்காலத்தில் தங்களுக்கு மருத்துவ தேவைகளோ அல்லது அவசரதேவைகளோ ஏற்படும்போது மிகவும் உதவியாக இருக்கும் என்றும் அவர்களால் கூறப்பட்டது.

இத்திட்டத்தில் மேலும் அதிகளவானவர்கள் இணைந்துகொள்ள விரும்புகிறார்கள். ஆனால் தற்போதுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வளங்களுக்கு அமைவாக அவர்கள் எல்லோரையும் உள்வாங்க முடியவில்லை எனவும் பரவலாக எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்தி அதிகமானோரை இத்திட்டத்திற்குள் உள்வாங்கவேண்டும் என்றும் நுகர்வோர் தங்களின் பரிந்துரைகளை முன்வைத்திருந்தார்கள்.

**நெருக்கடி மத்தியில் சேவைகள்**

வடமாகாணத்தை பொறுத்தவரை 49 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்தமாக 450ற்கு மேலான விற்பனைநிலையங்கள் உள்ளன. ஆனால் இவ்விற்பனை நிலையங்கள் எல்லாம் சரியானமுறையில் இயங்குகிறதா? தமது சேவைகளை மக்களுக்கு வழங்குகின்றதா?

கூட்டுறவு என்பது மக்கள்மயப் படுத்தப்பட்ட ஒரு அமைப்பு அவர்கள் தனியாரைப் போன்று அதிக இலாபத்துக்காக இயங்குவதில்லை. ஆரம்ப காலங்களில் கூட்டுறவுத்துறை மீதான அரசின் கவனமும், தன்நிறைவு பொருளாதாரமும் நுகர்ச்சிக் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்கு துணைநின்றன. ஆனால் திறந்த பொருளாதாரம் காரணமாக இலங்கையினுடைய பொருளாதார கொள்கைகள் ஏற்றுமதிசார்ந்ததாக மாறியது. அரசு முக்கியத்துவம் கொடுத்து சுயதொழில் போன்ற விடையங்களில் கவனம் செலுத்தி கூட்டுமுயற்சிகளை கைவிடும் நிலமையேற்பட்டது. இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவுகள் மற்றும் யுத்தம்காரணமாக ஏற்பட்ட சொத்து இழப்புக்கள் நுகர்ச்சிக் கூட்டுறவுகள் மொத்த கொள்வனவை செய்வதற்கான நடைமுறை மூலதனம் இல்லாத நிலைக்கு தள்ளியது.

மேலும் பொருட்கள் தனியார்கடைகளில் தாரளமாக கிடைப்பதால் பெருமளவிலான மக்கள் தனியார்கடைகளை நாடிச்செல்லும் நிலையும் ஏற்பட்டது. இதனால் விற்பனை குறைவடைந்தது. கூட்டுறவுசங்கங்கள், தனியாரிடமிருந்து குறைந்த அளவில் பொருட்களை கொள்வனவு செய்யும்போது கொள்வனவு விலை அதிகமாகிறது இது சிறிய இலாப நோக்குடன் இயங்கும் நுகர்ச்சி கூட்டுறவுகளுக்கு இலாபமீட்டமுயாத நிலை உருவாக காரணமாகிறது. கூட்டுறவுகள் சுயாதீனமான மக்கள் நலன்பேணும் அமைப்புகள் என்பதால் தமது வருமானத்திலிருந்தே நடைமுறைச்செலவுகளை ஈடுசெய்பவை. ஆனால் நுகர்ச்சிப்பகுதியின் இந்த நிலை தொடர்ச்சியாக அவை விற்பனை நிலையங்களை கொண்டு நடத்துவதற்கும், சேவைகளை வழங்குவதற்கும் தடையாக உள்ளது.

அரச வங்கிகள்கூட நுகர்ச்சிக் கூட்டுறவுகளுக்கான கடன்வசதிகளை வழங்க விரும்பாதநிலையில் சில சங்கங்கள் தமது பிற கூட்டுறவுச் செயற்பாடுகளான கடன்வழங்கல், எரிபொருள் விற்பனை நிலையங்கள் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் வருமானங்களுக்கூடாக மக்களுக்கு நியாயமான விலையில் பொருட்களை வழங்கவேண்டும் என்பதற்காக சில முயற்சிகளை முன்னெடுப்பதற்கு முன்வருகின்றன. நெருக்கடிக்குள் மூழ்கிப்போகும் பொருளாதாரத்தின் மத்தியில் கூட்டுறவின் இவ்வாறான சேவைகள் தொடர்வது அவசியமல்லவா? ■

**கட்டுரையாளர்:**
**கா. சுகன்ஜா, வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் ஆய்வு பிரிவு**

# சீமான் அறிக்கையால் சூடுபிடிக்கும் அரசியல்
# தி.மு.கவுக்கு பா.ஜ.க. பகையா? நட்பா?

ஆ. விஜயானந்த்

“ஒன்றியம் எனும் வார்த்தையை கூறியே, ஒப்பேற்றிவிடலாம் என எண்ணாமல், மமதா பானர்ஜியைப் போல பா.ஜ.க அரசை எதிர்ப்பதற்கு தி.மு.க முன்வர வேண்டும்” என்கிறார் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான். இந்திய அரசுடன் மென்மைப்போக்கை தி.மு.க கடைப் பிடிக்கிறதா? என்ற கேள்வி இதன்போது எழுகின்றது.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் சந்தித்தார். கடந்த ஜூன் 4 ஆம் தேதி நடந்த இந்தச் சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய சீமான், “இந்தச் சந்திப்பை நான் பெருமைக்குரியதாகப் பார்க்கிறேன். பேரறிவாளன் உள்பட ஏழு பேர் விடுதலை குறித்து முதலமைச்சரிடம் வலியுறுத்தினோம். அவர் அதில் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். புதிய அரசின் செயல்பாடு சரியாக இருக்கிறது. மிகவும் வேகமாக இயங்குகிறார்கள்” என தெரிவித்தார்.

சட்டமன்ற தேர்தலில் தி.மு.க எதிர்ப்பை மையமாக வைத்து களமிறங்கிய சீமான், முதலமைச்சரை சந்தித்துப் பேசியது விவாதப் பொருளாக மாறியது. இந்நிலையில், தி.மு.க அரசின் செயல்பாடுகளை கடுமையாக விமர்சித்து சீமான் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நீட் தேர்வு, ஸ்டெர்லைட் விவகாரம், கூடங்குளம் அணுஉலை விரிவாக்கம், எழுவர் விடுதலை எனப் பல விஷயங்களை அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், ‘தமிழகத்தில் வலிமையில்லாத நிலையில் அ.தி. மு.கவின் தோளேறி பின்வாசல் வழியாக ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கத் துடிக்கும் பா.ஜ.கவை முதன்மை எதிரியாகக் கட்டமைத்து, அதனையொட்டி பரப் புரைகளை முன்வைத்து அதிகாரத் திற்கு வந்த தி.மு.க, இன்றைக்கு பா.ஜ.க இட்ட பாதையில் செல்வதும் அவர்களை மென்மையான போக்கோடு அணுகுவதும் பெருத்த ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது’ என்று சீமான் கூறியுள் ளார்.

தொடர்ந்து அந்த அறிக்கையில், ‘இந்திய அரசியலமைப்பு சாசனத்தில் கூறப்பட்ட ‘ஒன்றியம்’ எனும் சொல்லைப் பயன்படுத்தியதைத் தாண்டி தி.மு.க அரசு, பா.ஜ.கவை எதிர்த்து வீரியமாக செய்த அரசியல் என்ன? 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.கவுக்கு எதிராக நாடெங் கிலும் எழுந்த எதிர்கட்சிகளின் அணிச் சேர்க்கையை, ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முந்திக் கொண்டு அறிவித்து முறியடித்த ஸ்டாலின், தற்போது அதன் நீட்சியாக பா.ஜ.கவை பகைக்காது அரசியல் செய்ய முனைகிறார்.

### வெற்று நாடகமா?

அண்ணாவின் வழியில் நடத்துவதாகக் கூறும் தி.மு.க, அண்ணாவின் உயிலென வர்ணிக்கப்படக்கூடிய மாநிலத் தன்னாட்சியை நிலைநாட்டத் தயங்குவது ஏன்? எழுவர் விடுதலையில் ஆளுநருக்கு அழுத்தம் கொடுத்தோ அல்லது 161வது சட்டப்பிரிவின்படி மீண்டும் தீர்மானம் இயற்றியோ எழுவர் விடுதலையைச் சாத்தியப்படுத்த வேண்டிய தி.மு.க, அது எதனையும் செய்யாது, தனக்கு அதிகாரமில்லை எனும் ஆளுநரின் உண்மைக்குப் புறம்பான கூற்றை ஏற்பது போல, ஒப்புக்கு குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதி அனுப்பி விட்டால் போதுமா? அந்த குடியரசு தலைவரை நேரில் சந்தித்தபோது கருணாநிதியின் படத்தைச் சட்டப்பேரவையில் திறந்து வைக்க அழைப்பு விடுத்த ஸ்டாலின், எழுவர் விடுதலை குறித்து ஒரு வார்த்தைகூட பேசாததன் மூலம் குடியரசு தலைவருக்குக் கடிதம் அனுப்புவது வெற்று நாடகம் என்பதை ஒப்புக்கொண்டு விட்டார்தானே?’ எனக் காட்டமாக விமர்சித்துள்ளார் சீமான்.

கடந்த ஆட்சியில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர், நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற்று வந்தார். இப்போது அதுவும் இல்லாமல் போய்விட்டது. தற்போது, ஹமாணவர்களுக்கு வேறு வழியில்லை, காலம் குறைவாக இருக்கிறது’ என்கிறார்கள். அடுத்ததாக, ஏழு பேர் விடுதலையில் 2016 ஆம் ஆண்டு அறிக்கை ஒன்றை வெளியிட்ட கருணாநிதி, ஹ161 ஆவது விதியின்படி மாநில அரசுக்கே அதிகாரம் இருக்கும்போது, எதற்காக காதை சுற்றி மூக்கைத் தொட வேண்டும். நீங்களே நேரடியாக அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள்,’ என்றார்.

இந்த விவகாரத்தில் பேரறிவாளனின் வழக்கறிஞர்கள் சட்டப் போராட்டத்தை முன்னெடுத்தனர். ‘ஆளுநர் விரைவாக முடிவெடுக்க வேண்டும்’ என நீதிமன்றம் கூறியபோது, ‘குடியரசுத் தலைவருக்கே அதிகாரம்’ என ராஜ்பவன் மாளிகை கூறியது. ‘அப்படியில்லை’ எனக் கூறி பேரறிவாளன் தரப்பினர் சட்டரீதியாக போராடி வருகிறார்கள். அவர்களை விடுவிப்பதற்கான அதிகாரம் என்பது மாநில அரசிடம்தான் உள்ளது. இந்த அரசு வந்த பிறகு, மீண்டும் குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதியதன் மூலம் அத்துணை போராட்டங்களையும் வீணடித்துவிட்டார்கள். அண்மையில் குடியரசு தலைவரை சந்திக்கச் சென்ற போது இதுகுறித்துக் செய்தியாளர்கள் கேட்ட போது, ஹநீதிமன்றத்தில் வழக்கு உள்ளது’ என்றார்கள்.

### தி.மு.க எதிர்வினை

“சீமானின் குற்றச்சாட்டுகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?” என தி.மு.கவின் செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் வழக்கறிஞர் ராஜீவ்காந்தியிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம்.

“அந்த அறிக்கை முழுக்க முழுக்க தி.மு.க மீதான வன்மத்தில் புரிதல் இல்லாமல் எழுதப்பட்டதாகவே பார்க்கிறேன். ‘ஒன்றியம்’ என்ற வார்த்தையை வைத்து தி.மு.க ஒப்பேற்றவில்லை. அரசிலமைப்புச் சட்டத்தில் உள்ள ஒன்றியம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தக் காரணம், ஒற்றை ஆட்சித் தன்மை என்ற அடிப்படையில் பா.ஜ.க செயல்பட்டு வருகிறது.

ஒன்றியம் என்ற சொல்லாடல் என்பது சினிமா வசனமாக இல்லாமல், கூட்டாட்சித் தத்துவத்தைப் பேசுகின்ற முக்கியமான வார்த்தையாக உள்ளது. ஏனென்றால், மாநில அரசின் பட்டியலில் உள்ளவற்றைக்கூட அந்தந்த அரசுகளைக் கேட்காமல் முடிவெடுக்க முடியும் என்ற நிலையில் பா.ஜ.க இருக்கும் போது, ‘நீங்கள் ஒன்றி யம்தான், இரு தரப்பின் ஒப்புதலோடு தான் எதையும் நிறை வேற்ற வேண்டும்’ என்ற வாதத்தை தி.மு.க முன்வைக்கிறது. அதனால் தான் இந்தச் சொல்லை வலிந்து சொல்கிறோம். மேலும், ‘மம்தா பானர்ஜி போல சண்டை போட வேண்டும்’ என்கிறார். மேற்கு வங்க கலாசாரம் என்பது அங்கு இரு கட்சிகளுக்கான பூசலாக வெடித் துள்ளது. இங்குள்ள நிலைமை என்பது வேறு” என்கிறார்.

“மோகன் பாகவத் வருகை, நீட் தேர்வு, ஸ்டெர்லைட் விவகாரம் போன்றவை தொடர்பாகவும் சீமான் பட்டியலிட்டுள்ளாரே?” என்றோம். “மோகன் பகவத் விவகாரத்தில், உயர் பாதுகாப்பில் உள்ள ஒருவருக்கு சட்டம் ஒழுங்கை மதிக்கின்ற ஓர் அரசு, பாதுகாப்பு கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அது ஒரு நடைமுறை. இந்த விவகாரத்தில் உதவி ஆணையரின் அறிக்கை வெளியில் வந்ததால் உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டது. எடப்பாடி பழனிசாமி போல, ‘எங்களுக்குத் தெரியாமல் நடந்துவிட்டது’ எனக் கூறவில்லை. அந்த அதிகாரியையும் 2 மணிநேரத்தில் விடுவித்தோம்” என்கிறார்.

### தி.மு.கவுக்கு போட்டியா பா.ஜ.க?

“பா.ஜ.கவோடு தி.மு.க மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கிறதா?” என மூத்த பத்திரிகையாளர் சிகாமணியிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம்.

“தி.மு.க அரசு மென்மைப்போக்குடன் நடப்பதாக விமர்சனம் செய்வதில் சரியில்லை. கடந்த காலங்களில் மத்திய அரசை தி.மு.க ஆதரிக்கவும் செய்துள்ளது, எதிர்த்தும் வந்துள்ளது. மத்திய அரசோடு மோதல்போக்கைக் கடைபிடிப்பதை நான் ஆதரிக்கவில்லை.

அதேநேரம், மத்திய அரசிடம் கேட்க வேண்டியதைக் கேட்பதாகத்தான் பார்க்கிறேன். அடுத்ததாக, தமிழ்நாட்டில் ஆக்சிஜன் தட்டுப்பாடு இனி வராது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இந்த விவகாரத்தில் சி.பி.எம் கட்சியும், ஹஸ்டெர்லைட் ஆலை இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும், நீட்டிக் கொள்ளக் கூடாது’ எனக் கூறியுள்ளனர். இதில், சந்தேகம் தெரிவிப்பது என்பது சரியான ஒன்றாகத் தெரியவில்லை” என்கிறார்.

தொடர்ந்து பேசுகையில், “நீட் தேர்வு என்பது ஒரு சிக்கலான பிரச்னை. இதில் மாநில அரசால் திடீரென மாற்றிவிட முடியும் எனத் தோன்றவில்லை. தேர்தலின்போது அவர்கள் பேசியது என்பது உண்மைதான். இதில் மத்திய அரசை மனமாற்றம் செய்வது போன்றவற்றில் மாநில அரசுக்கு அவகாசம் இருக்கிறது. அவர்களுக்கு கால அவகாசம் கொடுத்துப் பார்ப்பார்கள். மம்தா பானர்ஜி போல கடுமையான நிலைப்பாட்டை எடுப்பது என்பது ஓர் அரசியல். மேற்கு வங்கத்தில் ஆட்சியைப் பிடிக்கும் நோக்கத்தில் பா.ஜ.க வந்ததால் மோதிப் பார்க்கும் நிலை ஏற்பட்டது. இங்கு அப்படிப் பட்ட நிலை எதுவும் இல்லை. தி.மு.கவுக்கு நேரடிப் போட்டியாக பா.ஜ.க இல்லை.

மத்திய தர வர்க்கத்தினரின் அனுதாபத்தைப் பெறும் வகையில் பா.ஜ.க அரசியல் செய்து வருகிறது. இதற்கு எதிரான கொள்கை அரசியலை தி.மு.க மேற்கொள்ளாமல் இருந்தால்தான் சிக்கல் வரும். அதற்கேற்க கட்சித் தொண்டர்களை கொள்கைரீதியாக சிந்திக்க வைப்பது தான் சரியான ஒன்றாக இருக்க முடியும். மோகன் பகவத் விவகாரத்தில் உத்தரவை உடனடியாக வாபஸ் பெற்றது என்பது சரியான விஷயம்.

தலைவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதை தவறான ஒன்றாகப் பார்க்க முடியுமா எனத் தெரியவில்லை. சீமான் போன்றவர்கள், முக்கியமான நிலைக்கு வரும் வரையில் இதுபோன்ற பேச்சுக்களை பேசலாம். இந்த விவகாரத்தில் கடுமையான வார்த்தைகளைப் பயன் படுத்துவதால் மட்டும் தீர்வு கிடைக்கும் என நான் நம்பவில்லை” என்கிறார் சிகாமணி.

- பி.பி.சி.



> சட்டமன்ற தேர்தலில் தி.மு.க எதிர்ப்பை மையமாக வைத்து களமிறங்கிய சீமான், முதலமைச்சரை சந்தித்துப் பேசியது விவாதப் பொருளாக மாறியது. இந்நிலையில், தி.மு.க அரசின் செயல்பாடுகளை கடுமையாக விமர்சித்து சீமான் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

# புலமைச் சிகரம்





## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி





மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I

நேரம் - 45 நிமிடம்


கல்வி tv CHANNEL

❖ **கீழே தரப்பட்டுள்ள 1 ஆம் 2 ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள உருவின் மிகப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**




01. 
1)  2)  3) 

02. 
1)  2)  3) 

❖ **தரப்பட்டுள்ள இரண்டு உருக்களினை நன்கு அவதானித்து உரு A க்கும் உரு B க்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எத்தனை?**

03. 
A B

1) 2   2) 4   3) 3

04. கீழே தரப்பட்டுள்ள கூட்டத்தினுள் உள்ளடங்கக் கூடிய உருவைத் தெரிவு செய்க.

1)  2)  3) 

05. தரப்பட்டுள்ள சொற்களுள் ஒரு சொல் வேறுபட்டுள்ளது. அச் சொல்லைத் தெரிவு செய்க.
அம்புலி , நிலா , சந்திரன் , இந்திரன் , மதி
1) அம்புலி   2) சந்திரன்   3) இந்திரன்

06. இங்கு தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் இரண்டு சொற்கள் ஒரு கூட்டமாகவும், மூன்று சொற்கள் ஒரு கூட்டமாகவும் அமைக்கும்போது ஒரு சொல் வேறுபட்டு இருக்கும். அச் சொல்லைத் தெரிவு செய்க.


| திங்கள் , பங்குனி , வைகாசி , சனி , செவ்வாய் , யுரேனஸ் |
|---|


1) திங்கள்   2) பங்குனி   3) சனி

07. | A | C | E | → | B | D | F | எனின்

| i | iii | v | → | | | | இடைவெளிக்குப் பொருத்தமானது.

1) | ii | iv | v |   2) | ii | iv | vii |   3) | ii | iv | vi |





08. 799, 777, 37491 எண்களை இடமிருந்து வலமாகவும், 387, 479 ஆகிய எண்களை மேலிருந்து கீழாகவும் அமையுமாறு கட்ட வலையமைப்பை நிரப்பினால் 5 ஆவது நிரலில் மேலிருந்து கீழாக அமையும் எண் யாது?

1) 97   2) 17   3) 79

09. பின்வரும் கணிதச் செய்கையினை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



1) 25   2) 5   3) 6



10. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது எது?
சுயமான ஒளி இல்லை
புவியதை வலம் வருவான்
மாதத்தில் ஒருமுறை மாயமாவான்
தண்மையான ஒளிதனை தரணிக்களிப்பான்.
1) நட்சத்திரம்   2) திங்கள்   3) பூமி


11. ▲ =3, △ =2, ■ =4, □ =5, ○ =1, ● =6
என்னும் தரவுகளைக் கொண்டு பிரசினத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
○ ■
x ▲
____
____
1) ■ △   2) □ △   3) ▲ △


12. 
இங்கு ஊடுருவு தாளில் இரண்டு படங்கள் வரையப் பட்டுள்ளன. ஒன்றன் மீது ஒன்று வைக்கப்பட்ட பின்னர் தெரியும் உருவைத் தெரிவு செய்க.
1)  2)  3) 


13. 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி திங்கட்கிழமை எனின் அம் மாதத்தின் திங்கட்கிழமைகள் எத்தனை?
1) 5   2) 4   3) 3

14. 
இவ்வுருவில் உள்ள முக்கோணிகள் எத்தனை?
1) 31   2) 13   3) 42

15. 
சதுரமுகி தாயக்கட்டை அருகில் தரப்பட்டுள்ளது. இதன் எதிர்ப்பக்கங்களின் கூட்டுத்தொகை 7 எனின் சரியாகக் காட்டப்பட்ட உரு எது?
1) 

2) 

3) 


16. 

= ........................................

எண் சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களைக் கூட்டினால் கிடைக்கக்கூடிய எண் யாது?
1) 1910   2) 110   3) 200

### மகளிர் அமைப்பினரின் ஏற்பாட்டில்

# ஹிஷாலினிக்கு நீதி கோரி யாழில் நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

**பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயது சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



மகளிர் அமைப்பினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினர் ஆகியோரின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. குறித்த போராட்டத்தில் மகளிர் அமைப்புக்களின் பிரதி நிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதி நிதிகள், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ - 03)



# பிரதமர் மஹிந்தவின் யாழ். விஜயம் இரத்து!

கொழும்பு, ஜூலை 28

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் யாழ்ப்பணம் விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனப் பிரதமர் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்குத் திட்டமிடப்பட்ட நிலையில் குறித்த விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனப் பிரதமர் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பிரதமரின் யாழ். விஜயம் திடீரென இரத்தாமைக்கான காரணத்தை அறிய முடியவில்லை. (இ)

# கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 123 பேர் சிக்கினார்கள்

கொழும்பு, ஜூலை 28

நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 123 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 52 ஆயிரத்து 227 ஆக அதிகரித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களில் 48 ஆயிரம் பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# மேலும் 3 பிரதேசங்கள் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 28

நாட்டில் மேலும் மூன்று பிரதேசங்கள் நேற்று அதிகாலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதனைக் கொரோனா பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, களுத்துறை மாவட்டத்தின் அகலவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெக்குலந்தல தெற்கு கிராம சேவகர் பிரிவின் பிம்புர பகுதி தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்துவில் 13 கிராம சேவகர் பிரிவும் முடக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்போவில தெற்கு கிராம சேவகர் பிரிவின் கரதியான தோட்டமும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. (இ)

### பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள

# சிறுவர்களைத் தேடி விசேட நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 28

சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள வீடுகள் மற்றும் பணியிடங்களைக் கண்டறிவதற்கு நேற்று முதல் விசேட சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணம் மற்றும் கொழும்பு நகர் உள்ளிட்ட பிரதேசங்களிலேயே இந்தச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் கூறினார்.

பெண்கள் மற்றும் சிறுவர் பணியகம், சமூக பொலிஸ் பிரிவு என்பன இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. (இ)

# உயர்நீதிமன்றின் தீர்ப்பைப் புறக்கணித்த அரசுக்கு எதிராக ஆசிரியர் சங்கம் வழக்கு

மாணவர்களைப் பாடசாலைக்கு உள்வாங்கும் விடயத்தில் அரசு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைப் புறக்கணித்துச் செயற்படுகின்றது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"2011ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கியது. பாடசாலைக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் போது ஒரு வகுப்பில் 35 மாணவர்களே இருக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2016ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துமாறே உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனினும், தீர்ப்பளிக்கப்பட்ட விடயம் நடைமுறைப்படுத்தவில்லை.



2021ஆம் ஆண்டு 35 மாணவர்களையே உள்வாங்கினர். எனினும், தற்போதைய அரசு புதிய சுற்றறிக்கையை வெளியிட்டு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முரணாக 40 மாணவர்களை உள்வாங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

இது முற்றிலும் தவறான செயற்பாடு. உயர்நீதிமன்றத் தீர்ப்பையும் அவமதிக்கும் செயற்பாடாகும். எனவே, இதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை இன்று (நேற்று) தாக்கல் செய்தோம்.

அதிக எண்ணிக்கையில் மாணவர்களை உள்வாங்குவதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்" - என்றார். (இ)

# உடுப்பிட்டி வாள்வெட்டுக் கும்பலில் 2 பேர் கைது; நால்வர் தலைமறைவு

வடமராட்சி, ஜூலை 28

யாழ்., வடமராட்சி, உடுப்பிட்டி நாலவலடியில் அண்மையில் இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்திய கும்பலில் இருவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், ஏனைய நான்கு பேர் தலைமறைவாகியுள்ள நிலையில் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

உடுப்பிட்டி - நாவலடியில் வீதியில் கதைத்துக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது அங்கு மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த கும்பல் ஒன்று தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றது.

இந்தச் சம்பவம் கடந்த 20ஆம் திகதி இரவு இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.



சி.சி.ரி.வி. காணொளியின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்த ஒருவரை கடந்த வாரம் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மற்றொரு சந்தேகநபர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார். 24 வயதுடைய அவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இரண்டாவது சந்தேக நபரிடம் வாள் ஒன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் நால்வர் தலைமறைவாகியுள்ளனர் என்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலும் கூறினர். (இ - 02)



# சூரிய சக்தியால் உலகை சுற்றிய வந்த விமானம்!

## 5 ஆண்டுகளை நிறைவு செய்தது

அபுதாபி, ஜூலை 28,

மாற்று எரிசக்திக்கான விழிப்புணர்வை ஏற்படுத்த எரிபொருள் இல்லாமல் சூரிய மின் சக்தியால் உலகை சுற்றிய விமானம் தனது பயணத்தை நிறைவு செய்து 5 ஆண்டுகள் முடிந்து உள்ளது. இந்த விமானத்தை இயக்கிய விமானி அவரின் பயணத்தை நினைவுகூர்ந்து சமூக வலைத் தளத்தில் பதிவிட்டு உள்ளார்.

அமீரகம் மற்றும் ஏனைய உலக நாடுகளின் கூட்டமைப்பில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் சூரிய மின்சக்தி விமானம் 'சோலார் இம்பல்ஸ் 2' ஆகும். இந்த விமானம் உலக நாடுகளிடையே மாற்று எரிசக்திக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது.

இது கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி அபுதாபியில் இருந்து தனது உலக பயணத்தை தொடங்கியது. இந்த விமானம் வானில் சராசரியாக 80 கி.மீ. வேகத்திலும், அதிகபட்சமாக 140 கி.மீ. வேகத்திலும் செல்லக் கூடியது.

மேலும் இந்த விமானத்தால் அதிகபட்சமாக சராசரியாக 8 ஆயிரம் அடி முதல் 39 ஆயிரம் அடி உயரம் வரை வானில் பறக்கக்கூடியது. இந்த விமானத்தில் மின்சக்தியால் இயங்கும் மோட்டார்களைத் தவிர வேறு எந்த மாற்று எரிசக்தியாலும் இயக்க முடியாது.

இதற்காக இதன் பிரமாண்ட இறக்கைகளில் 17 ஆயிரம் சூரிய மின்தகடுகள் பொருத்தப்பட்டுள்ளது. அதில் இருந்து பெறப்படும் மின்சாரத்தால் இந்த விமானத்தை ஒருவர் மட்டுமே இயக்க முடியும். இதை ஆண்ட்ரே போர்ச்பெர்க் (வயது 63) மற்றும் பெட்ராண்ட் பிக்கார்டு (68) ஆகிய 2 விமானிகள் ஒருவர் மாற்றி ஒருவர் இயக்கினார்கள். இந்த விமானத்தின் இறுதி பயணத்தை விமானி பெட்ராண்ட் பிக்கார்டு இயக்கினார்.

இந்த விமானம் உலகை சுற்றி கடைசியில் கடந்த 2016 ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் திகதி எகிப்து நாட்டில் அபுதாபி வருவதற்காக தரை இறங்கியது. ஆனால் விமானி பிக்கார்டுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதாலும், சவுதி அரேபியாவில் ஏற்பட்ட தட்பவெப்ப நிலை மாறுபாடு காரணமாகவும் உடனே அங்கிருந்து புறப்பட முடியாமல் இந்த பயணம் ஒத்திவைக்கப்பட்டது.

அதன் பிறகு அனைத்து தடங்கல்களையும் கடந்து கடந்த 2016ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி அமீரக நேரப்படி அதிகாலை 3.28 மணிக்கு கெய்ரோ விமான நிலையத்தில் இருந்து அபுதாபிக்கு புறப்பட்டது. இந்த பயணத்தில் 48 மணி நேரம் தொடர்ந்து எந்த எரிபொருளின் உதவி இல்லாமல் வானில் 3 ஆயிரம் கிலோமீட்டர் பயணம் செய்து வெற்றிகரமாக அபுதாபி அல் பத்தீன் விமான நிலையத்தில் தரையிறங்கியது. தற்போது வெற்றிகரமாக 5 ஆண்டுகள் தனது பயணத்தை நிறைவு செய்து உள்ளது.

இது குறித்து அந்த விமானத்தை இயக்கிய விமானி பிக்கார்டு தனது சமூக வலைத் தளத்தில் கூறியதாவது:-

"5 ஆண்டுகளுக்கு முன் நானும், எனது நண்பர் போர்ச்பெர்க் இருவரும் இந்த விமானத்தை இயக்கினோம். இது உலகளாவிய விமானமாக தொழில்நுட்பத்தின் உச்சத்தை காட்டுவதாக உள்ளது. தூய்மையான மற்றும் திறன்மிக்க தொழில்நுட்பங்கள் சுற்றுச் சூழலுக்கு உகந்ததாக உள்ளது. புகையில்லாமல், சத்தமில்லாமல் பறப்பது எவ்வளவு பெரிய நிகழ்வு என்பதை இப்போது நினைவூட்டுவதாக உள்ளது" என அவர் நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

# தலிபான்களுக்கு அஞ்சி 46 ஆப்கான் படையினர் பாகிஸ்தானில் தஞ்சம்!



இஸ்லாமாபாத், ஜூலை 28

தலிபான்களின் தாக்குதலுக்கு பயந்து ஆப்கானிஸ்தான் ராணுவ வீரர்கள் 46 பேர் பாகிஸ்தானில் தஞ்சமடைந்திருப்பதாக இஸ்லாமாபாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் அந்த நாட்டு ராணுவத்துக்கு பக்கபலமாக இருந்து வந்த அமெரிக்க படைகள் தற்போது அங்கிருந்து வெளியேறி விட்டன. இதன் காரணமாக அங்கு தலிபான்களின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது.

முழு ஆப்கானிஸ்தானையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் தலிபான்களின் தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றனர். குறிப்பாக அண்டை நாடுகளுடனான எல்லை பகுதிகளை கைப்பற்றுவதில் அவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் சர்வதேச எல்லையில் பாதுகாப்பு நிலைமை மோசமாகி வருகிறது.இந்த நிலையில் தலிபான் தாக்குதலுக்கு பயந்து ஆப்கானிஸ்தானை சேர்ந்த 46 ராணுவ வீரர்கள் தங்கள் நாட்டில் தஞ்சம் புகுந்து உள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

5 ராணுவ அதிகாரிகள் உட்பட 46 வீரர்கள் எல்லையை கடந்து தங்கள் நாட்டுக்குள் வந்து அடைக்கலம் கோரியதாகவும், ராணுவ விதிமுறைகளின் படி அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கியதாகவும் பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது.

# ஆப்கனைத் தொடர்ந்து ஈராக்கிலிருந்து வெளியேறும் அமெரிக்கப் படையினர்

வாஷிங்டன், ஜூலை 28

ஆகஸ்ட் மாத இறுதியில் ஈராக்கிலிருந்து மீதமுள்ள அமெரிக்க ராணுவத்தினர் வெளியேறுவார்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஜோ பைடன் அமெரிக்க அதிபரான பிறகு, முதல் முறையாக ஓவல் அலுவலகத்தில் ஈராக் அதிபர் முஸ்தபா அல் காதிமியைத் திங்களன்று சந்தித்தார். இந்தச் சந்திப்பில், ஈராக்கில் அமெரிக்கப் போர் நடவடிக்கையை முறையாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தத்தில் இருவரும் கையெழுத்திட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் அமெரிக்க ராணுவத்தினர் ஈராக்கிலிருந்து வெளியேறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செய்தியாளர் சந்திப்பிலும் இதனை ஜோ பைடன் உறுதி செய்தார்.

2017ஆம் ஆண்டு ஈராக்கில் ஐஎஸ் ஆதிக்கத்தை அமெரிக்கப் படைகளுடன் இணைந்து ஈராக் அரசு கட்டுக்குள் கொண்டுவந்தது. போரில் ஐஎஸ் தோற்கடிக்கப்பட்டதாகவே இராக் அறிவித்தது. இந்த நிலையில் கடந்த சில வருடங்களாக பாக்தாத் உள்ளிட்ட நகரங்களில் வன்முறை அதிகரித்து வருகிறது.

முன்னதாக, ஒபாமா காலத்திலிருந்தே பிற நாடுகளில் போர்ப் பணியில் ஈடுபடும் அமெரிக்க வீரர்கள் தாய் நாட்டுக்குத் திரும்ப வரவழைக்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில் சமீபத்தில் ஆப்கனிலிருந்து அமெரிக்கப் படையினர் வெளியேறினர். தற்போது ஈராக்கிலிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

# கலிபோர்னியாவில் துப்பாக்கி சூடு பொலிஸ் அதிகாரி உள்பட 5 பேர் பலி!

கலிபோர்னியா, ஜூலை 28

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவில் சமீப காலமாக துப்பாக்கி சூடு சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. இதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தாலும் குறையவில்லை.

இந்த நிலையில் அமெரிக்காவில் மீண்டும் துப்பாக்கி சூடு சம்பவம் நடந்துள்ளது. கலிபோர்னியா மாகாணம் வடமேற்கில் உள்ள பேக்கர்ஸ் பீல்டில் உள்ள ஒரு வீட்டில் மர்ம நபர் ஒருவர் துப்பாக்கி முனையில் சிலரை பிணை கைதிகளாக பிடித்து வைத்திருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து கலிபோர்னியாவின் துணை ஷெரீப் கேம்பஸ் தலைமையிலான பொலிஸ் குழு ஒன்று அங்கு சென்றனர். அந்த வீட்டை சுற்றி வளைத்து பிணை கைதிகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். வீட்டின் கூரை மீது ஏறி உள்ளே நுழைந்தனர். அப்போது மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டதில் பொலிஸ் அதிகாரி கேம்பஸ் உயிரிழந்தார்.

இதையடுத்து மர்மநபரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர். வீட்டுக்குள் ஒரு பெண்ணும், அவரது இரண்டு மகன்களும் உயிரிழந்து கிடந்தனர். அவர்கள், துப்பாக்கி சூடு நடத்திய நபரின் மகன்கள் மற்றும் அவர்களது தாய் என்று கூறப்படுகிறது.

மேலும் துப்பாக்கி சூடு நடத்திய 41 வயதான நபரின் பெயரையும் போலீசார் வெளியிடவில்லை. இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்திவருகிறார்கள்.

# சீனாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்தவும் அடக்கவும் அமெரிக்கா முயற்சிக்கிறது

## சீன வெளிவிவகார அமைச்சர் குற்றச்சாட்டு

பீஜிங், ஜூலை 28

உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளான அமெரிக்கா மற்றும் சீனா இடையே கடுமையான மோதல் நிலவுகிறது. இரு நாடுகளின் உறவும் சுமுகமான நிலையில் இல்லை. இவ்வாறு இரு நாடுகளின் மோசமான உறவுக்கு அமெரிக்காவே காரணம் என சீனா குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இந்த நிலையில் இரு நாடுகளின் உறவு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அமெரிக்க துணை வெளியுறவு அமைச்சர் வெண்டி ஷெர்மன் சீனா சென்றுள்ளார். அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற 6 மாதத்துக்கு பிறகு அமெரிக்காவின் உயர்மட்ட பிரதிநிதி ஒருவர் சீனாவுக்கு சென்று நேரடி பேச்சுவார்த்தை நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

வெண்டி ஷெர்மன் அங்கு அமெரிக்கா-சீனா உறவுக்கு பொறுப்பான சீனாவின் துணை வெளியுறவு அமைச்சர் ஸீ பெங் மற்றும் வெளியுறவு மந்திரி வாங் யி ஆகிய இருவரையும் தனித்தனியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

இந்த நிலையில் இருதரப்பு பேச்சுவார்த்தை தொடங்க இருக்கும் சூழலில் இரு நாடுகளின் மோசமான உறவுக்கு அமெரிக்காவே காரணம் என சீனா குற்றம் சாட்டியுள்ளது. மேலும் மிகவும் தவறான வழிகாட்டுதலையும், ஆபத்தான கொள்கையையும் அமெரிக்கா மாற்றிக்கொள்ள வேண்டும் என சீனா அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து சீன துணை வெளியுறவு அமைச்சர் ஸீ பெங் கூறுகையில், "சீனாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்தவும், அடக்கவும் ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் முயற்சிக்கிறது. இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் கடுமையான சிரமங்களை எதிர்கொள்வதற்கான அடிப்படை காரணம், சில அமெரிக்கர் கள் சீனாவை கற்பனை செய்யப்பட்ட எதிரியாக சித்தரிப்பதே ஆகும்" என கூறினார்.

# ஒலிம்பிக் கிராமத்தில் 155 தொற்றாளர்கள்

ஒலிம்பிக் கிராமத்துக்குள் இரு விளையாட்டு வீரர்கள் உட்பட ஏழு புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என ரோக்கியோ ஒலிம்பிக் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜூலை முதலாம் திகதி முதல் ஒலிம்பிக் விளையாட்டுகளுடன் தொடர்புடைய மொத்தம் 155 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

திங்களன்று டச்சு ரென்னிஸ் வீரர் ஜீன்-ஜூலியன் ரோஜருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அவர் போட்டிகளிலிருந்து பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ரோக்கியோவில் தரையிறங்கிய பின்னர் கோவிட்-19 தொற்றால் செக் குடியரசு, அமெரிக்கா, சிலி, தென்னாபிரிக்கா மற்றும் நெதர்லாந்து ஆகிய அணி வீரர்கள் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# ஒருநாள் தொடரை வென்றது அவுஸ்ரேலியா!

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான மாற்றியமைக்கப்பட்ட மூன்றாவது ஒருநாள் போட்டியில், அவுஸ்ரேலியா அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை, அவுஸ்ரேலியா அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பார்படோஸ் மைதானத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, 45.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 152 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, லீவிஸ் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களையும் டேரன் பிராவோ 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சில், மிட்செல் ஸ்டாக் 3 விக்கெட்டுகளையும் ஹசில்வுட், அகர் மற்றும் ஸம்பா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் டர்னர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 153 என்ற என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அவுஸ்ரேலியா அணி, 30.3 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அவுஸ்ரேலியா அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மத்தியு வேட் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் அலெக்ஸ் கெரி 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், செல்டோன் கொட்ரேல், அகீல் ஹொசைன், அல்சாரி ஜோசப், ஹெய்டன் வோல்ஷ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அஸ்டன் அகரும் தொடரின் நாயகனாக மிட்செல் ஸ்டாக்கும் தெரிவு செய்யப்பட்டனர்.



# ஒசாகா தோல்வி

ரோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் டென்னிஸ் போட்டியில் ஜப்பான் நாட்டு வீராங்கனையான நவோமி ஒசாகா மூன்றாவது சுற்றில் செக்,குடியரசு வீராங்கனையிடம் தோல்வியுற்றார்.

ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிய நவோமி ஒசாகாவை, வெளியேற்றியுள்ளார் செக்,குடியரசு நாட்டு வீராகைனை மார்க்கெட்டா வொண்ட்ருசோவா.

ஒலிம்பிக் ரென்னிஸ் போட்டிகளின் தனது மூன்றாவது சுற்று மோதலில் உலக தரவிசையில் இரண்டாமிடத்தில் உள்ள ஒசாகாவும் 42ஆவது இடத்தில் உள்ள செக். குடியரசில் வொண்ட்ருசோவா ஆகியோர் மோதினர், இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய வொண்ட்ருசோவா முதல் செட்டை 6-1 என வென்றார். அதனைத் தொடர்து இரண்டாவது செட்டில் சற்று வேகத்தை அதிகரித்து ஆடிய நவோமி சரிக்கு சமமாக புள்ளிகளை சேர்த்த போதிலும், இறுதியில் 4-6 என வொண்ட்ருசோவா வெற்றி பெற ஒசாகா டோக்கியோ ஒலிம்பிக் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

# ஒலிம்பிக் வரலாற்றில் பிலிப்பைன்ஸ்க்கு முதல் தங்கப் பதக்கம்

ரோக்கியோ ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 55 கிலோ கிராம் பளுதூக்கல் போட்டியில் பிலிப்பைன்ஸின் ஹிடிலின் டயஸ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

ஒலிம்பிக் வரலாற்றில் பிலிப்பைன்ஸ் பெறும் முதல் தங்கப் பதக்கம் இதுவாகும்.

இப் பதக்கம் கொவிட்-19 தோற்று நோயினால் சோர்வுற்ற பிலிப்பைன்ஸ் மக்களுக்கிடையே கொண்டாட்டங்களை அதிகரித்துள்ளது.

தங்கத்தை வென்றதன் மூலம், ஒலிம்பிக்கில் தங்கத்திற்கான பிலிப்பைன்ஸின் 97 ஆண்டுகால காத்திருப்பையும் டயஸ் நிறைவுக்கு கொண்டு வந்தார்.

பிலிப்பைன்ஸ் முதன்முதலில் 1924 இல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றது. மூன்று வெள்ளி மற்றும் ஏழு வெண்கல பதக்கங்களை ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரை பிலிப்பைன்ஸ் வென்றுள்ளது.

2016 ஆம் ஆண்டில், ரியோ விளையாட்டுப் போட்டியில் டயஸ் வெள்ளிப் பதக்கம் வென்றதுடன், 2018 ஆம் ஆண்டில் ஜகார்த்தாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பிடித்தமையும் குறிப்பிடத்தக்கது.





# தோல்வியை அடுத்து திருமண முன்மொழிவு

ஜப்பானில் நடைபெற்றுவரும் ரோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து வெளியேற்றப்பட்டதையடுத்து ஆர்ஜென்ரீனாவின் பென்சிங் வீராங்கனையான மரியா பெலென் பெரேஸ் மௌரிஸ், அவரது பயிற்சியாளர் லூகாஸ் குய்ல்லெர்மோ சௌசெடோவிலிருந்து "தயவு செய்து நீ என்னைத் திருமணம் செய்துகொள்கின்றாயா" என்ற கையெழுத்தால் எழுதப்பட்ட பதாதையை கண்டுள்ளார்.

17 ஆண்டுகளாக மௌரிஸேயின் துணைப் பயிற்சியாளராக இருக்கும் சௌசெடோவின் இரண்டாவது முயற்சி இது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2010ஆம் ஆண்டு சௌசெடோவின் முன்மொழிவு நிராகரிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இம்முறை ஆம் என மௌரிஸே பதிலளித்திருந்தார்.

ஹங்கேரியின் அன்னா மார்டனுடனான இறுதி 32 பேருக்கான சுற்றுப் போட்டியில் 12-15 என்ற புள்ளிகள் கணக்கில் மௌரிஸே தோற்றமையை அடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றிருந்தது.



# வெலிக்கடைச் சிறைப் படுகொலை 38ஆவது நினைவேந்தல் மன்னாரில்

மன்னார், ஜூலை 28

வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று நினைவுகூரப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன் ராஜ் தலைமையில் நடைபெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளிகளான ஜெகன், தேவன் உட்பட 53 அரசியல் கைதிகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது கட்சியின் உறுப்பினர்கள், கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளர் டானியல் வசந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (இ)

# வவுனியா பல்கலையின் முதலாவது வேந்தராக மோகனதாஸ் நியமனம்



வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது வேந்தராக பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகம் இந்தத் தகவலை அறிவித்துள்ளது.

இவர் வவுனியா பல்கலைக் கழகம் வளாகமாக இருந்த போது 3 வருடங்கள் வரை முதல்வராகக் கடமையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக மங்களேஸ்வரன் நியமனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆலயங்களில் சுகாதார நடைமுறை பின்பற்றப்படாமை மிக ஆபத்தானது

## யாழ். மாவட்ட அரச அதிபர் எச்சரிக்கை



**யாழ்ப்பாணம், ஜூலை 28**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்து ஆலயங்களில் சுகாதார நடைமுறை சரியாகப் பின்பற்றப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த நிலைமை அபாய நிலைக்கு இட்டுச் செல்லும் எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.**

தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் நேற்று மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி யாழ். குடாநாட்டில் இந்து ஆலயங்களில் பூஜை வழிபாடுகள், திருவிழாக்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வழங்கப்பட்டுள்ள அனுமதியை மக்கள் பின்பற்றவில்லை. சுகாதார நடைமுறையைப் பின்பற்றாது இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு அபாய நிலைக்கு இட்டுச் செல்லக்கூடிய ஒரு விடயம். எனவே, பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் மிகவும் அவதானமாகச் செயல்பட வேண்டும்.

கரவெட்டிப் பகுதியில் இந்து ஆலய பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டவர்களில் 49 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் யாழ். குடாநாட்டில் பல ஆலயங்களில் திருவிழாக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும்.

அதாவது இந்த இக்கட்டான காலகட்டத்தில் நாம் அனைவரும் ஒத்துழைத்தால் மாத்திரமே இந்தத் தொற்றில் இருந்து தப்பிக்க முடியும்.

சுகாதாரப் பிரிவினரால் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள போதிலும் அந்தத் தளர்வைச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிச் செயற்படுவதன் மூலமே வழமை போல் எமது செயற்பாடுகளை செயற்படுத்த முடியும்.

எனவே, பொதுமக்கள் தற்போதுள்ள நிலைமையை அனுசரித்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிச் செயல்பட வேண்டும்” - என்றார். (இ - 03)

# மரண அறிவித்தல்

**மலர்வு**
**05 - 11 - 1950**



**உதிர்வு**
**25 - 07 - 2021**

## சின்னர் கணபதிப்பிள்ளை (ரூபோட்டி)

யாழ். வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் கணபதிப்பிள்ளை 25-07-2021 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னர் காலஞ்சென்றவர்களான கணபதி சின்னர் – இளையப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தர் – குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும்,மீனாச்சிப்பிள்ளை அவர்களின் கணவரும், கமலறதி (லண்டன்), காந்தரூபன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவசீலன் (லண்டன்), அனுஷா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,மிதுஷிகன், தரனியா, அபிஸ்கா, அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், முருகேசு (இலங்கை), கந்தசாமி (இலங்கை), சுப் பிரமணியம்(லண்டன்), பஞ்சலிங்கம்(இலங்கை), தியாகராஜா (லண்டன்), பாலசிங்கம் (லண்டன்), அருந்தவம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,அன்னம்மா, இராசாத்தி, கமலாதேவி, இராணியம்மா, தவமலர், சுமங்கலா, கிருஷ்ணபிள்ளை, வேலுப்பிள்ளை, குஞ்சுப்பிள்ளை, நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கீதாஞ்சலி அவர்களின் அன்புச் சித்தப்பாவும், கோகிலன் அவர் களின் அன்பு மாமனாரும்,கமலறஞ்சன், சுஜாதா, தனுஷாந், தர்சிகா, கார்த்தீபன், கஜிதாஜினி, அர்ச்சனா, அனுராஜ், கஜனிகா, கனிஸ்ரா, சங்கீர்த்தனா, சந்துஷா, சாம்பவி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், துகிரதன், பிரதீபன், கௌசிகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு :**

| | |
|---|---|
| **கமலறஞ்சன் (பெறாமகன்)** | **- 0033643704956** |
| **மீனாச்சிப்பிள்ளை (மனைவி)** | **- 0776411922** |
| **தவசீலன் (மருமகன்)** | **- 00447846711436, 00442089083250** |
| **காந்தரூபன் (மகன்)** | **- 00447701356956, 442036388005** |
| **சுப்பிரமணியம் (சகோதரன்)** | **- 00447305962466** |
| **தியாகராஜா (சகோதரன்)** | **- 00447305863384** |
| **பாலசிங்கம் (சகோதரன்)** | **- 00447939151026** |
| **கோகிலன் (மருமகன்)** | **- 0766055029** |
| **கமலறஞ்சன் (பெறாமகன்)** | **- 0033643704956** |

# பருத்தித்துறையில் மேலும் 11 பேருக்குக் கொரோனா

பருத்தித்துறை, ஜூலை 28

பருத்தித்துறை நகர் உள்ளிட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 11 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

395 பேரிடம் முன்னேடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே 11 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் மீன்சந்தை வியாபாரிகள் இருவரும், ஓட்டோ சாரதிகள் இருவரும், தனியார் பஸ் சேவை ஊழியர் ஒருவரும், வெதுப்பகம், வர்த்தக நிலையம் ஊழியர்கள் தலா ஒருவரும் மற்றும் மீனவ சங்கப் பிரதி ஒருவரும் அடங்குகின்றனர்.

பருத்தித்துறை நகர அண்டி மருந்தகங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் வங்கிகள் திறக்கப்படுகின்றன.

பருத்தித்துறை நகரில் இருந்த பஸ் தரிப்பிடம் மூடப்பட்டுள்ளதால் டிப்போ சந்தியிலிருந்து பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. (இ - 03)

# சைக்கிளில் சென்றவர் திடீரென வீழ்ந்து மரணம்

முல்லைத்தீவு, ஜூலை 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளைப் பகுதியில், சைக்கிளில் சென்றவர் திடீரென வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளை, மூன்றாம் வட்டாரத்தை சேர்ந்த 74 வயதுடைய நடராசா சிவராசா என்பவரே, சைக்கிளில் பயணிக்கும்போது திடீரென வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இவரின் உடல், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர், உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

சம்பவம் தொடர்பில், முள்ளியவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

## போதைப்பொருளுடன் ஒருவர் சிக்கினார்

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது 41 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் தெஹிவளை பிரதேசத்தில் வைத்து ‘ஸோபா’ எனப்படும் உதயங்க என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சந்தேகநபருடன், அவர் பயணித்த மோட்டார் வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## வடக்குக்கு...

முன்களப் பணியாளர்களுக்கும் நாளை முதல் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் சீனாவில் இருந்து கிடைக்கப்பெற்ற சினோபார்ம் தடுப்பூசிகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இரண்டு இலட்சமும், வவுனியா மாவட்டத்துக்கு 75 ஆயிரமும் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு தலா 50 ஆயிரமும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த நான்கு மாவட்டங்களிலும் இந்தத் தடுப்பூசியானது 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், 18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்கனவே முதல் இரண்டு கட்டங்களிலும் ஒரு இலட்சம் பேருக்கு முதலாவது தடவை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 3ஆம் கட்டமாக இரண்டு இலட்சம் பேருக்கு முதலாவது தடவையாக தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நாளை 29ஆம் திகதி வியாழக்கிழமை முதல் தடுப்பூசி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் பற்றிய விபரங்கள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியால் வெளியிடப்படும்.

இந்தத் தடுப்பூசியானது நாளை வியாழக்கிழமை 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பணிபுரிகின்ற ஆசிரியர்களும், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும், ஏனைய மாகாணங்களிலும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு அவர்களது வதிவிடம் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தடுப்பூசிகள் வழங்கப்படும். இவர்கள் தமது ஆசிரிய பணியை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்து தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

முன்களப் பணியாளர்களுக்கான தடுப்பூசியானது நாளைமறுதினம் 30ஆம் திகதி முதல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்களப் பணியாளர்கள் தமது பிரிவுக்குரிய சுகாதார வைத்திய அதிகாரியைத் தொடர்புகொண்டு தமக்கான தடுப்பூசி வழங்கும் நேரத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட தினத்தில் தடுப்பூசி வழங்கப்படும். இந்தத் தடுப்பூசி ஏற்றப்படும் தினம் பற்றிய விபரங்கள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகள் மூலம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறியத்தரப்படும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு யாழ். போதனா வைத்தியசாலையிலும், தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைகளிலும் எதிர்வரும் 31ஆம் திகதி மற்றும் ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி சனிக்கிழமைகளில் காலை 8 மணி முதல் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறான நிலைமைகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தமது பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியைப் பாதுகாப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு அழைத்து வர முடியாத நிலையில் படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு அவர்களது வீடுகளுக்கே சென்று தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நோயாளர்களின் விபரங்களை அவர்களை பராமரிப்பவர்கள் அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இவர்களுக்கான தடுப்பூசியானது தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் இறுதி நாட்களில் வீடுகளுக்குச் சென்று வழங்கப்படும்" - என்றுள்ளது. (இ - 03)

## கொரோனா...

படையில், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி 4,195 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் மேலும் 1,185 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 299,366 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 1,349 பேர் இன்றையதினம் குணமடைந்துள்ளனர். அதன்படி, 270,356 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்பதுடன் 23,678 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## வடக்கு, கிழக்கு...

பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்கும் நோக்கோடு சுமார் 16 இலட்சம் தடுப்பூசிகளை சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

குறித்த தடுப்பூசிகளை இலங்கைக்கான சீனத் தூதுவரினால் ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதனையடுத்து, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான குறித்த தடுப்பூசிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தத் தடுப்பூசிகள் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கு அமைய வடக்கு கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில், சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராட்சி மற்றும் சீனத் தூதரக அதிகாரிகள், ஜனாதிபதி செயலக அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## சம்பள...

மான நிதி பலம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்க்க பிரதமர் தலைமையிலான துணைக் குழுவை நியமிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது, நாட்டின் தற்போதைய நிதி நிலைமைகளில் உடனடியாக மாற்றங்களைச் செய்ய அரசாங்கத்தால் முடியவில்லை என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண குறிப்பிட்டார்.

ஆகவே ஆசிரியர் சம்பள திருத்தம் தொடர்பாக எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது என்றும் அவர் கூறினார்.

## கொழும்பில்...

ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் குறித்து கண்டறியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம், டெல்டா தொற்றானது வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களைப் போன்று நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பரவக் கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## மேல் மாகாணம்...

வியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"வீட்டிலே இடம்பெறுகின்ற கொரோனா மரணங்கள், அதேபோன்று மரணங்களின் போதான கிரியைகள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்று சுகாதாரத்துறையின் அறிவுறுத்தியுள்ளனர். இவ்வாறிருக்க பிரபல ஊடக நிறுவனமொன்றின் தலைவரது கொரோனா மரணம் அண்மையில் சம்பவித்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் பலர் அவரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள் பாதுகாப்பு கவசம், உடைகளை அணிந்திருக்கவில்லை. இவ்வாறான விடயங்களுக்கு இடமளிப்பதா? இது ஒரு விமர்சனத்துக்குரிய விடயமாக மறிவிட்டதே?" என்று குறித்த ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

"நீங்கள் கண்ட காட்சிகளில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவியுங்கள். கொரோனாத் தொற்று பரவல்களுக்கான சாத்தியக்கூறுகள் அங்கு நடந்திருப்பின் அது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவியுங்கள்" என்றார்.

"வீடுகளில் நடக்கும் மரணங்களில் பி.சி.ஆர். பரிசோதனையை நடத்தி கொரோனா மரணத்தை உறுதிபடுத்துவதில் ஒரு தாமதம் காணப்படுகின்றது. வீடுகளில் மரணிப்பவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றால் பி.சி.ஆர். பரிசோதனைக்கும் முன்பும் பின்பும் அது கொரோனா மரணமாகவே கருதப்படுகின்றது. எனவே, இவ்வாறான மரணங்களுக்குத் வைத்தியசாலைகளில் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்வதற்கான அனுமதியை தாருங்கள்" என்று ஊடகவியலாளர் ஒருவர் வேண்டுகோளை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

"இவ்விடயம் தொடர்பில் நாங்கள் ஆராய்ந்துப் பார்க்கின்றோம். எனினும், உரிய தரப்பினருடன் கலந்தாலோசித்தே இந்த விடயம் தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியும். சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல் அடங்கிய சுற்றுநிருபம் இருக்கின்றது. கோவை இருக்கின்றது. அந்தக் கோவையின்படியே செயற்படவேண்டியுள்ளது. இவ்விடயத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளரே தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது" - என்றார்.

"டெல்டா வைரஸ் தொற்று ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரியாக 30 வீதத்தினருக்கு இருக்கின்றது. தடுப்பூசிகள் இரண்டும் செலுத்தப்பட்டவர்களும் கொரோனாத் தொற்றால் மரணிக்கின்றனர். இது தொடர்பில் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்க முடியுமா?" என மற்றுமொரு கேள்வி கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

"இவ்விடயம் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளோம். இந்த விரிவான அறிக்கைகளை அவ்வப்போது ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி, நடத்தாமலோ வெளியிட வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. அந்த வேண்டுகோளை விடுத்துள்ளோம். செய்திகளினூடாக அவர்கள் அதனைத் தெரிவிக்க வேண்டும். - என்றார். (இ)

## அதிபர், ஆசிரியர்...

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பது தொடர்பில் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார். அதற்கமைய எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பணியாற்றுவதற்கு தயாராகுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கத்தினரிடம் தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகள் இருபத்து நான்கு ஆண்டு காலமாக காணப்படுகின்ற போதிலும் இதுவரை ஒரு நியாயமான தீர்வு கிடைக்கவில்லை என்றும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி குறித்து தெளிவான புரிந்துணர்வை கொண்டிருப்பதால் ஒரே தடவையில் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள முடியாவிடினும், சம்பள முரண்பாட்டை குறைப்பதற்கு விளக்க அறிக்கையின்படி கொள்கை தீர்மானமொன்றை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகள் இதன்போது வேண்டுகோள் விடுத்தனர்.

அதன்போது கருத்து தெரிவித்த பிரதமர், "அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு தொடர்பில் நான் தெளிவான புரிதலை கொண்டுள்ளேன். சம்பள முரண்பாட்டை குறைப்பது அவசியம் என்பதை ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் நாம் ஏற்றுக்கொள்கிறோம். எனினும் நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் உலகளாவிய நிலைமை காரணமாக நாட்டின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சி மட்டத்தில் காணப்படுவதால் அரசாங்கத்தினால் விரைவில் சம்பள அதிகரிப்பை மேற்கொள்வது முடியாத விடயம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

உங்களது பிரச்சினை தொடர்பில் கல்வி அமைச்சர் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்தார். அமைச்சரவையில் நான் அதிபர், ஆசிரியர்களுக்காக முன்நிற்பேன். இப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம். எனினும் சம்பள ஆணைக்குழு வுடன் கலந்துரையாடி சம்பளம் வழங்கு வது தொடர்பில் தீர்மானிக்கப்பட வேண் டும்" என பிரதமர் சுட்டிக்காட்டினார்.

சமூக ஊடகங்களில் பல்வேறு செய்திகள் பரப்பப்படுவதாக சுட்டிக்காட்டிய தொழிற்சங்க பிரதிநிதிகள், சம்பள முரண்பாடு குறித்த விளக்க அறிக்கைக்கு தொழிற்சங்கங்கள் உடன்படுவதாகவும், அதன் உள்ளடக்கங்கள் அமைச்சரவை பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா என்று தெரியவில்லை என்றும் கூறினர்.

அதற்கு பதிலளித்து உரையாற்றிய கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு தொடர்பிலான உச்சநீதிமன்ற தீர்ப்பு, அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானம் மற்றும் விளக்க அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## அமெரிக்காவின்...

தலைப்பட்சமாக பொருளாதாரத் தடைகளை விதிக்கும் அதேவேளை அதிகார வரம்பை மீறி பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதாகவும் அது குற்றம் சாட்டியுள்ளது.

அதன்படி இலங்கை, இந்தியா, சீனா உள்ளிட்ட 27 நாடுகள் அமெரிக்காவின் தடைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் சீன தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக ரஷ்யாவிலிருந்து பில்லியன் கணக்கான டொலர் மதிப்புள்ள எஸ்-400 ஏவுகணைகளை பெற்றுக்கொண்டமை காரணமாக இந்தியாவும் பொருளாதார தடைகளை எதிர்கொண்டுள்ளதாக சீன தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## யாழ்.பல்கலைக்கழக...

ளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த மாணவி வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

மாணவி விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வேலணையில்...

பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்டவர்கள் அனைவரும் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணையைச் சேர்ந்த 126 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu



## முல்லைத்தீவில் இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதுண்டு விபத்து!

*முல்லைத்தீவு, ஜூலை 28*

முல்லைத்தீவு மாவட்டத்தின், புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு 12ஆம் கட்டை பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்தார். இரண்டு மோட்டார் சைக்கிள்கள், நேருக்கு நேர் மோதியதில், விபத்து சம்பவித்தது.

இதன்போது படுகாயமடைந்த நபர், 1990 அவசர நோயாளர் காவு வண்டி மூலம், தர்மபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த புதுக்குடியிருப்புப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (இ)

## ஹிஷாலினியின் புதைக்குழிக்கு பலத்த பாதுகாப்பு

*கொழும்பு, ஜூலை 28*

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றி வந்த நிலையில் உயிரிழந்த ஹிஷாலினியின் சடலம் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய மீண்டும் தோண்டப்படவுள்ள நிலையில், ஹிஷாலினியின் புதைக்குழிக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி கடந்த 15ஆம் திகதி உயிரிழந்த நிலையில் டயகமவிலிலுள்ள அவரது வீட்டுக்குச் சடலம் கொண்டு செல்லப்பட்டு கடந்த 16ஆம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஹிஷாலினியின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதால் சடலத்தை மீண்டும் தோண்டி எடுத்துப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்த நிலையில் சடலம் தோண்டி எடுக்கப்படவுள்ளது.

சிறுமியின் மரணம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், நேற்றும் கொழும்பிலிருந்தும் நுவரெலியாவிலிருந்தும் டயகம பகுதிக்குச் சென்ற விசேட பொலிஸ் குழுக்கள், முன்னாள் அமைச்சர் வீட்டில் இதற்கு முன்பு வேலை செய்தவர்களிடமும் சாட்சிகளிடமும் விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

ஆரம்பகட்ட மரண விசாரணைகள் மற்றும் சடலத்தைத் தோண்டுவதற்குரிய சட்டரீதியான நடவடிக்கைகள் முடிவுபெற்றபின், சடலம் தோண்டி எடுக்கப்பட்டு மீண்டும் வைத்திய பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)






## மரண அறிவித்தல்

மலர்வு 23 - 04 - 1930



உதிர்வு 22 - 07 - 2021

### திருமதி மேரி அன்னபூரணி அலோஷியஸ் மனுவேற்பிள்ளை

யாழ்ப்பாணம் 25 மாட்டின் வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வைவதிவிடமாகவும் கொண்ட மேரி அன்னபூரணி அலோஷியஸ் மனுவேற்பிள்ளை அவர்கள் கடந்த (22.07.2021) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன் – யோகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற அலோஷியஸ் மனுவேற்பிள்ளையின் அன்பு மனைவியும், அலோஷியஸ், Valentine (பவானி), பாமா, குமார், அல்லி (Chrissy), ஜெயா (Clement) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,காலஞ்சென்றவர்களான தாசன், அமிர்தராணி, றூபி– அரியம் மற்றும் J.J. யோகராசா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அனீற்றா, கானா, பரா, யோகா (Bava), ராஜன், காலஞ்சென்ற அம்மாச்சி ஆகியோரின் அன்பு மாமியாரும்,கங்கா, குக்கூ, லக்ஷ்மன், துஷி, ஜோய், பூப்ஸி, டானியல், ஜனகன், தான்யா, சணா, றொஷான், ஷரோன், யோசுவா, அனிதா, தாரணி, றெபேக்கா, அனூஜ் ஆகியோரின் அன்புப் பாட்டியும், ஆனந்த், ஆதி, அடிசன், அர்ஜுனா, மீனாக்ஷி, ஜாய்டன், எசேக்கியேல் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Wednesday, 28 Jul 2021 5:00 PM - 9:00 PM
Thursday, 29 Jul 2021 10:00 AM - 11:00 AM
Jerrett Funeral Homes - Scarborough Chapel 660 Kennedy Rd, Toronto, ON M1K 2B5, Canada

*திருப்பலி :*
Thursday, 29 Jul 2021 11:00 AM
Jerrett Funeral Homes - Scarborough Chapel 660 Kennedy Rd, Toronto, ON M1K 2B5, Canada

*நல்லடக்கம் :*
Thursday, 29 Jul 2021 1:00 PM
Pine Hills Cemetery and Funeral Centre 625 Birchmount Rd, Scarborough, ON M1K 1R1, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு :*
**குமார் - மகன்**
Mobile : +16476806704

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 22 - 12 - 1965



உதிர்வு 18 - 07 - 2021

### துரைராசா இரவீந்திரன் (துரை, ரவி)

புங்குடுதீவு 7ம் வட்டாரம் வரதீவு மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto it வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா இரவீந்திரன் கடந்த (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முத்தர் பரம்பரையின் வழித்தோன்றலும் காலஞ்சென்ற ஐயாத்துரை – நாகமுத்து தம்பதியரின், காலஞ்சென்ற நல்லதம்பி – பாக்கியம் தம்பதியரின் பேரனும், துரைராசா, காலஞ்சென்ற கண்ணம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை, மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும், மிதிலாராணியின் பாசமிகு கணவரும், அபிஷேக், சௌமியா, அகிஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோகனராசன், நிர்மலாதேவி (பவானி), சுவேந்திரராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பிறேமராணி, கலாராணி, முரளீதரன், அனுராகரன், சுதந்தினி, செல்வராணி, சுதாகரன், விகிர்தினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும்,பிரவீன்ராஜ், கவீன்ராஜ், லிஸ்சுவீனா, ரஜீவன்ராஜ், மயூரி, தரண்யன், சுபர்ணா ஆகியோரின் பெரிய தந்தையும், மதுவீனாவின் மாமனாரும், விஜயகுமார், சுரேஷ்குமார், மதிவதனி, நளினி ஆகியோரின் அன்புச் சகலனும், செல்லத்துரை, கண்ணுத்துரை, இராசதுரை, காலஞ்சென்ற சிவலிங்கம், கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்ற மயில்வாகனம், சற்குணபூபதி(பூபதி) ஆகியோரின் அன்பு பெறாமகனும், காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், சொர்ணலிங்கம்(பாலன்), பாலாம்பிகை மற்றும் பரமேஸ்வரி, சின்னத்தங்கம், பூபாவதி, பாரதியம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

*பார்வைக்கு :*
Tuesday, 27 Jul 2021 6:00 PM - 9:00 PM
Wednesday, 28 Jul 2021 8:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை :*
Wednesday, 28 Jul 2021 8:30 AM - 10:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம் :*
Wednesday, 28 Jul 2021 10:30 AM
Highland Hills Funeral Home & Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு :*
**மோகன் - சகோதரன்**
Mobile : +33751015099

தகவல்:
**குடும்பத்தினர்.**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு




7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-உத்தம புத்திரன்,NKG
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை
நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10
திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
7.00 மணி : பாரதீ-பெண் ஆளுமை சங்கீதபாட
ஆசிரிய ஆலோசகர் நா.ஆனந்தராணி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : நேருக்கு நேர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில்
கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி
வினாத்தாள்

ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு